கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M.
FERNANDO
580, HOSPITAL ROAD
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 12 ஞாயிற்றுக்கிழமை (26 - 03 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 119

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண
# கால எல்லை நிர்ணயிக்க முடியாது

## புதுடில்லியில் சந்திரிகா தெரிவிப்பு

புதுடில்லி. மார்ச் 26

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும் எனினும் இதனைத் தீர்ப்பதற்கு கால எல்லை எதனையும் நிர்ணயிக்கமுடியாது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா புதுடில்லியில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் அமைச்சர்கள் லக்ஷ்மன் கதிர்காமர் கிங்ஸ்லி விக்கிரமரத்ன, மற்றும் செயலாளர் பால பட்டபெண்டி ஆகியோர் பயணம் செய்த எயர் லங்கா விமானம் நேற்று அதிகாலை 2.00 மணிக்கு புதுடில்லியில் உள்ள இந்திரா காந்தி விமான நிலையத்தில் இறங்கியது.

இதன் பின்னர் குடியரசுத் தலைவர் மாளிகையான ராஷ்டிர பவனில் இடம்பெற்ற வரவேற்பு வைபவத்தில் பிரதமர் நரசிம்மராவ்வும் ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவும் இலங்கை ஜனாதிபதியை வரவேற்றனர்.

இங்கிருந்து புறப்படும் போது செய்தியாளர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு கால எல்லையை நிர்ணயிக்கமுடியாது என்று ஜனாதிபதி சந்திரிகா பதில் அளித்தார்.

தமது பயணம் இலங்கை — இந்திய நல்லுறவை மேலும் பலப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

முதலில் ஜனாதிபதி சந்திரிகா புதுடில்லி ராஷ்டிரபதி பவனில் இந்தியக் குடியரசுத் தலைவர் சங்கர் தயாள்சர்மாவைச் சந்தித்தார். பின்னர் புதுடில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் நரசிம்மராவ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அனுருத்த பதில் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, மார்ச் 26

ஜேர்மனிக்குச் சென்றிருந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த நாடு திரும்பி, பதில் பாதுகாப்பு அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

வைத்திய சிகிச்சைக்காக கடந்த வாரம் ஜேர்மனி சென்றிருந்த அனுருத்த ரத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

தென்பகுதி இளைஞர், யுவதிகள் குழு

## கதிர்காமத்தில் இருந்து வடக்கே பாதயாத்திரை

கொழும்பு, மார்ச் 26

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தைச் சேர்ந்த இளைஞர்கள், யுவதிகள் அடங்கிய குழு ஒன்று விரைவில் தென் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு சமாதான யாத்திரை மேற்கொள்ளவுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் கலாநிதி குமாரி நவரத்தின மகரஹமவில் உள்ள மன்றத் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இதனை அறிவித்தார்.

கதிர்காமத்தில் இருந்து புறபபடும் பாத யாத்திரைக் குழுவினர் தென் பகுதி மக்களின் சமாதானச் செய்தி ஒன்றையும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஐ-4]

பொருள்கள் மீதான கட்டுப்பாடு:

## மன்னிப்புக் கோரும் பாணியில் பதில் கடிதம்

### சந்திரிகா அனுப்பியதாக தகவல்

கொழும்பு, மார்ச் 26

தடை நீக்கப்பட்ட பொருள்கள் வடக்கே எடுத்துச் செல்லப்படுவதில் நிர்வாக ரீதியாகவும், வேறு வகைகளிலும் ஏற்பட்ட தடைகளுக்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுதலைப் புலிகளிடம் மன்னிப்புக் கோரும் பாணியில் கடிதம் ஒன்றை அனுப்பியிருப்பதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் இம்மாதம் 17 ஆம் திகதி அனுப்பிய கடிதத்துக்கான தமது பதில் கடிதத்திலேயே ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு மன்னிப்பு கோரும் பாணியில் எழுதியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீனவர்கள் தொழில் புரியும் கடல் பிரதேசத்தை

[6ஆம் பக்கம் பார்க்க]

## பிரபாகரனை நாடு கடத்துவது குறித்து சந்திரிகாவுடன் ராவ் பேச வேண்டும்

### குமரி அனந்தன் கோரிக்கை

சென்னை, மார்ச் 26

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனை இந்தியாவுக்குக் கொண்டு வரும் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் விவாதிக்குமாறு தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. குமரி அனந்தன் பிரதமர் நரசிம்மராவிடம் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக குமரி அனந்தன் பிரதமர் நரசிம்மராவுக்கு நேற்று செய்தி ஒன்றை அனுப்பி வைத்தார்.

வழக்கு விசாரணைக்காக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான பொட்டு அம்மானையும் இந்தியாவுக்குக் கொண்டு வருவது குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் நடைபெறும் இருதரப்புப் பேச்சின் போது எடுத்துரைக்குமாறு அந்தச் செய்தியில் குமரி அனந்தன் கோரியுள்ளார்.

கச்சதீவு தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை இலங்கை அரச முழுமையாக பின் பற்றாததால் இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படும் சம்பவம் குறித்தும் இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்றும் குமரி அனந்தன் கேட்டுள்ளார். (இ-ஐ)




தடை நீக்கப்பட்ட பொருள்களுக்கே இந்தப் பாடென்றால் ..?

## நரசிம்மராவ் இலங்கை வருவார்

புதுடில்லி, மார்ச் 26

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் விரைவில் இலங்கை வர உள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா விடுத்த அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டார்.

நரசிம்மராவ்வின் இலங்கை விஜயம் குறித்த திகதி பின்னர் தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

## தமிழ் இளைஞர் சடலமாக மீட்பு!

கொழும்பு. மார்ச் 26

பொலன்னறுவைப்பகுதியில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட தாகக் கூறப்படும் தமிழ் இளைஞர் ஒருவரின் சடலம் திம்புலாகல — சேருவில காட்டுப் பகுதியில் இருந்து படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

கூட்டுப்படை நடவடிக்கை தலைமையக பேச்சாளர் பிரிகேடியர் நிஹால் ஜெயக்கொடி இத்தகவலைத் தெரிவித்துள்ளார். [ஐ 6]

மோதல் தவிர்ப்பு 28 ஆம் திகதிக்குப் பின்பும் தொடரும்:

## வடக்கே பொருள் செல்வதில் உள்ள தடை குறித்து படையினருடன் பேச்சு!

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச். 26

தடை நீக்கப்பட்ட பொருள்களை வடக்கே எடுத்துச் செல்வதில் ஏற்பட்டுள்ள தடைகளை நீக்குவது தொடர்பாக படையினருடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

— இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ்

நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும் பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அமைச்சர் பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

வடக்கே எடுத்துச் செல்ல தொடர்ந்து தடை விதிக்கப்பட்ட பொருள்களில் சிலவற்றின் தடையை நீக்குவது குறித்து தாம் ஆலோசித்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே தற்போது அமுலில் இருக்கும் மோதல் தவிர்ப்பு உடன்பாடு மார்ச் 28 ஆம் திகதிக்குப் பின்னரும் தொடர்ந்து அமுலில் இருக்கும் என்றும் அமைச்சர் பீரிஸ் அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். (ஐ-3-4)

## டீசல் மோசடி: 2 கப்டன்கள் சிக்கினர்

கொழும்பு, மார்ச். 26

இராணுவத்துக்கான எரிபொருள் கொள்வனவில் பல லட்சம் ரூபா பெறுமதியான டீஸலை இராணுவ கப்டன்கள் இருவர் மோசடி செய்திருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட இரு கப்டன்களையும் இராணுவ நீதி மன்றத்தின் முன் நிறுத்த இராணுவ உயர் பீடம் தீர்மானித்துள்ளது. (ஐ-6)

## சமாதான குழு மீண்டும் வரும்

கொழும்பு, மார்ச் 26

இரத்தினபுரி மாவட்ட எம். பி. திரு வாசுதேவ நாணயக்காரா தலைமையில் 300 பேர் அடங்கிய சமாதானக் குழுவினர் அடுத்த மாதம் யாழ்ப்பாணத்துக்கு பாத யாத்திரை மேற் கொள்ளவிருப்பதாக ''லங்கா தீப'' செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ- 6)

## கிளைமோர் வெடிகுண்டு மட்டக்களப்பில் மீட்பு!

### யுவதி பொலீஸாரால் கைது

கொழும்பு, மார்ச். 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் குருப்பஞ்சேனி என்னும் இடத்தில் நான்கு கிலோ எடையுள்ள ''கிளைமோர்'' ரக குண்டையும் வேறுபல வெடிப் பொருள்களையும் கடந்த திங்களன்று பொலீஸார் மீட்டுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

அந்த ''கிளைமோர்'' ரக குண்டை விடுதலைப் புலிகளே அப்பகுதியில் நிலத்தில் புதைத்திருக்கக்கூடும் என்றும் —

அது தொடர்பாக அப்பகுதியில் வசிக்கும் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் —

அப்பெண்ணின் சகோதரர் ஒருவர் விடுதலைப்புலிகளின் முகாம் ஒன்றில் வேலை செய்பவர் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்ததாகவும் — ''த ஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-5)

## ஜி.சீ.ஈ. பரீட்சை பெறுபேறு அடுத்த மாதம் வெளிவரும்

கொழும்பு, மார்ச் 26

கடந்த 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி சீ ஈ சாதாரணதர பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த மாத நடுப்பகுதியிலேயே வெளியாகும் என்று பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

பெறுபேறுகளை இம்மாத இறுதிக்குள் வெளியிடுவதற்கு பரீட்சைத் திணைக்களம் எடுத்த முயற்சி கைகூடவில்லை என்றும் அவ்வதிகாரி கூறினார்.

பெறுபேறுகளை தயார் படுத்தும் வேலைகள் தற்பொழுது மும்முரமாக நடைபெற்று வருவதால், அடுத்த மாத நடுப்பகுதி அளவில் அவை வெளியாகிவிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பொலீஸ் கான்ஸ்டபிளை காணவில்லை

கொழும்பு, மார்ச். 26

மாவிலாச்சிய பொலீஸ் பிரிவில் உள்ள எல்லைக் கிராமத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த ரிசேவ் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கடந்த 22 ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ளார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ 6)

கொழும்பில் 5 ஆண்டு தவம் கிடந்த

## 30 கணணிகளை எடுத்துவர பாதுகாப்புத்துறை அனுமதி

கொழும்பு, மார்ச் 26

யாழ். பல்கலைக்கழகத்துக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் அன்பளிப்புச் செய்த 30 கணணிகளும் மற்றும் விலையுயர்ந்த நவீன தொழில் நுட்ப சாதனங்களும் யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட உள்ளன.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன் கொழும்புக்கு வந்து சேர்ந்த மேற்படி சாதனங்கள் கொழும்பு துறைமுகத்தில் முடக்கி வைக்கப்பட்டிருந்தன.

அவற்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்கான அனுமதியைப்பெற கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் முயற்சி எடுத்து வந்தபோதும்—

பாதுகாப்பு விடயத்தை காரணம் காட்டி அதற்கான அனுமதியை வழங்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டு வந்தது.

இறுதியாக பிரிட்டிஷ் தூதரகம் எடுத்த முயற்சி காரணமாக அவற்றை எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்தன. [ஐ-4]

கனடாவில் அகதி அந்தஸ்து கோரிய

## ஈழத்தமிழர்கள் 318 பேரின் விண்ணப்பம் நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 26

கடந்த வருடம் கனடாவில் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பத்திருந்த 318 ஈழத்தமிழர்களின் விண்ணப்பங்கள் அந்தநாட்டு அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது

கடந்த வருடம் 365 ஈழத் தமிழருக்கு மட்டுமே கனேடிய அரசு அகதி அந்தஸ்து வழங்கியுள்ளது.

கொழும்பிலுள்ள கனேடிய தூதரகம், இலங்கையில் தமிழர்கள் வாழ முடியும் என தமது அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தது என்றும்—

அதனை அடுத்தே கனேடிய அரசு ஈழத் தமிழர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்குவதை கட்டுப்படுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஐ-5]

## 300 ஈ.பி.ஆர். எல். எவ். உறுப்பினர் அகதிகளுடன் திருமலை வந்தனர்

கொழும்பு, மார்ச் 26

தமிழகத்தில் தங்கியிருந்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த 300 பேர் ஈழத் தமிழ் அகதிகளுடன் திருமலைக்கு வந்துள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

தமிழகத்தில் இருந்து கடந்த [illegible] ஆம் திகதி வந்த கப்பலில் அகதிகளுடன் வந்து சேர்ந்தனர் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பெரும் எண்ணிக்கையான ஈ. பி. ஆர். எல். எவ் உறுப்பினர்கள் தமிழக முகாம்களில் உள்ளனர் இவர்கள் அனைவரும் [illegible] தாயகம் திரும்புவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-4]

வீட்டுப் பணியாளர்களாக

## இலங்கைப் பெண்கள் சிங்கப்பூர் செல்ல வாய்ப்பு

பெரும் எண்ணிக்கையிலான இலங்கைப் பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களாக சிங்கப்பூர் செல்ல வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கப்பூரில் பணிபுரியும் சுமார் 75 ஆயிரம் பிலிப்பீன்ஸ் நாட்டு பணிப் பெண்களை அந் நாட்டு அரசு திருப்பி அழைத்துக் கொள்ளத் தீர்மானித்திருப்பதை அடுத்தே இந்த வாய்ப்பு இலங்கைப் பெண்களுக்கு கிடைக்க உள்ளது.

தமது நாட்டு பெண்களை சிங்கப்பூரில் இருந்து திருப்பி அழைப்பதற்கு விமானங்கள் தயாராக வைக்கப் பட்டிருக்கின்றன என்று பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பிடல் ராமோஸ் தெரிவித்துள்ளார்.

பிலிப்பீன்ஸ் பெண்கள் திருப்பி அழைக்கப்பட்டால் சிங்கப்பூரில் வீட்டுப் பணிப் பெண்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட இடமுண்டு.

பிலிப்பீன்ஸ் நாட்டு பணிப் பெண் ஒருவர் சிங்கப்பூரில் தூக்கில் இடப்பட்ட சம்பவத்தை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான ராஜீக உறவுகள் முறிவடைந்துள்ளமை தெரிந்ததே. (ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானில் தலிபான் இயக்கம் ஈட்டிவரும் வெற்றியால்

# உள்நாட்டு யுத்தத்தில் புதிய திருப்பம்!

தலிபான் (Taliban) எனப்படும், இஸ்லாமிய அடிப்படை வாதக் கொள்கைகளை உடைய மாணவர் இயக்கம் சமீபத்தில் ஈட்டி வரும் வெற்றிகள் மூன்று வருடகால ஆப்கானிஸ்தான் உள்நாட்டு யுத்தத்தில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

ஆப்கானிஸ்தானில் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வரவும் —

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சகல தரப்புக்களையும் கொண்ட இடைக்கால அரசு ஒன்றை ஏற்படுத்தவும் — ஐக்கிய நாடுகள் சபை முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.

ஆப்கானிஸ்தானுக்கான

## வெளி உலகில்

ஐ. நா. வின் விசேஷ தூதுவரான ரியூனிசியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மஹ்மூட் மெய்ரிறி யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரையும் கடந்த சில மாதங்களாகச் சந்தித்துப் பேச்சு நடத்தி இருந்தார்.

ஆனால் தற்போது ஜனாதிபதி புர்ஹானுடின் ரபானியின் [Burhanuddin Rabbani] படைகளுக்கும், தலிபான் இயக்கத்துக்கும் இடையில் தலைநகர் காபூலின் சுற்றுப் புறங்களில் நடைபெறும் சண்டைகள் ஐ. நா. விசேஷ தூதுவரின் சமாதான முயற்சிகளை மழுங்கடித்து விட்டன.

ஏழு மாதங்களுக்கு முன்னர் தான் உருவாக்கப்பட்ட தலிபான் இயக்கம் தற்போது ஆப்கானிஸ்தானின் மூன்றில் ஒரு பகுதியைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ரபானியின் பிரதம அரசியல் எதிரியான முன்னாள் பிரதமர் குல்புடீன் ஹெக் மத்தியாரின் (Gul - buddin Hekmatyar) படைகளைக் கூட தலிபான் இயக்கத்தினர் தற்போது தோற்கடித்து விட்டனர்.

கடைசியாக காபூலுக்கு வெளியே ஜனாதிபதி ரபானியின் படைகளுக்கும், தலிபான் இயக்கத்துக்கும் இடையில் நடைபெற்ற சண்டைகளில், தலிபான் இயக்கம் ஏற்கனவே கைப்பற்றி இருந்த சில பகுதிகளை ரபானியின் படைகளிடம் இழந்து விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### 1979 சோவியத் ராணுவத் தலையீடு

ஆப்கானிஸ்தானில் நடைபெற்று வரும் அதிகாரப் போட்டிக்கு வித்திட்டது 1979 சோவியத் ராணுவத் தலையீடு என்பதில் சந்தேகம் இல்லை.

சுமார் பத்து ஆண்டுகள் — அதாவது 1989ஆம் ஆண்டு வரை சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டிருந்தன.

அப்போது சோவியத் படைகளுக்கு எதிராக கெரில்லாப் போர் நடத்திய முஜாஹிதீன் (Mujahideen) இயக்கங்களே சோவியத் யூனியன் தனது படைகளை வாபஸ் பெற்ற பின்னர் தற்போது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன.

1989 இல் சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வாபஸ் பெற்ற சமயம் தனக்கு ஆதரவான நஜிபுல்லா அரசை பதவியில் விட்டுச் சென்றிருந்தது.

இந்த சோவியத் ஆதரவு நஜிபுல்லா அரசு 1992 ஆம் ஆண்டு கவிழ்ந்ததை அடுத்து ஆரம்பித்த அதிகாரப் போட்டியின் விளைவுகளையே ஆப்கானிஸ்தான் மக்கள் இன்னும் அனுபவித்து வருகின்றனர்.

இடையில் ஐ. நா. வால் செய்து கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் எல்லாம் வலுவிழந்த நிலையில் முடிவில்லாத நிலையில் யுத்தம் தற்போது நீண்டு கொண்டு போகிறது.

சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டிருந்த காலத்தில் சுமார் 13 ஆயிரம் வீரர்களை இழந்திருந்தன.

சோவியத் யூனியனுக்கு பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்படவும் —

சோவியத் யூனியன் உடைந்து போகவும் — ஆப்கானிஸ்தானில் அது மேற்கொண்ட தலையீடும் ஒரு காரணம் என்பதில் சந்தேகம் இல்லை.

1979 ஆப்கானிஸ்தான் படை எடுப்புக்குப் பின்னர் ரஷ்யா தற்போது மிகப் பெரிய ராணுவ நடவடிக்கை ஒன்றை செச்சின்யா மீது மேற்கொண்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் படித்த

## ஐ. நா. வின் யுத்த நிறுத்த முயற்சிகளில் தடங்கல்

பாடத்தை ரஷ்யா மறந்து விட்டதாக விமர்சனங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

### அரசியலில் ஈடுபட தலிபான் மறுப்பு

ஆப்கானிஸ்தானில் ஜனாதிபதி ரபானியின் பதவிக் காலம் கடந்த டிசம்பர் மாதத்துடன் முடிவடைந்து விட்டது.

அமையப் போகும் இடைக்கால அரசில் தலிபான் இயக்கமும் பங்கு பற்றுமானால் தாம் பதவி விலகத் தயார் என ரபானி தெரிவித்துள்ளார்.

ஆனால் தலிபான் இயக்கம் ஆப்கானிஸ்தானில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டுவதே தனது நோக்கம் என்று கூறுகிறது.

அரசியலில் பங்கு பற்றுவது தனது எண்ணம் அல்ல என்றும் தெரிவிக்கிறது.

நடு நிலைமைப் படையாக தலைநகர் காபூலுக்குள் நுழைய அனுமதிக்கப்பட வேண்டும் என்று அதன் தலைவர் எனப்படும் மௌலானா மொஹம்மட் ஓமார் (Maulana Mohammad Omar) கோரிக்கை விடுத்துள்ளார்.

### தலிபானுக்கு எப்படி ஆயுதங்கள் கிடைத்தன?

ஆரம்பத்தில் சில நூறு வீரர்களைக் கொண்டிருந்த தலிபான் இயக்கம் தற்போது 50 ஆயிரம் வீரர்களைக் கொண்டிருக்கிறது.

கனரக டாங்கிகள், பீரங்கிகள், ஹெலிக் கொப்டர்கள், மிக்-23 ஜெட்விமானங்களை இந்த இயக்கம் வைத்துள்ளது. மூன்று விமான நிலையங்களை இந்த இயக்கம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. இவற்றுக் ஹெலிக்கொப்டர் உட்பட பெரும்பாலான யுத்தசாதனங்கள் முன்னாள் பிரதமர் ஹெக் மத்தியாரின் கோட்டையாக விளங்கிய சறாசியாப் நகரைக் கைப்பற்றிய போது பிடிபட்டவை.

கடந்த மூன்று வருடங்களாக தலைநகர் காபூலின் மீது இடைவிடாது ராக்கெட், பீரங்கித் தாக்குதல்களை நடத்தி 20 ஆயிரம் பேர் மரணமடைவதற்கும் சுமார் 1 லட்சம் பேர் காயமடைவதற்கும் காரணமாக இருந்தவர் ஹெக் மத்தியார்.

> **தலிபான் இயக்கத்தை பயன்படுத்தி யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது மூலம் பாகிஸ்தான் தனக்கு சாதகமான நிலையை உருவாக்க முயற்சிக்கிறது**

இவரின் படைகள் தற்போது தலிபான் படைகளுக்கு அஞ்சி பாதுகாப்பான இடங்களை நாடி மேலும் உள்நாட்டுக்குள் சென்று விட்டன.

ஹெக் மத்தியாரின் படைகள் அகன்று விட்டதால் காபூலின் சுற்றுப் புறங்களில் தற்போது ஜனாதிபதி ரபானிக்கு சவாலாக இருந்து வருவது தலிபான் இயக்கம் மட்டுமே.

ஆப்கானிஸ்தானில் தலைநகர் காபூல் மட்டுமே ரபானியின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. ஆப்கானிஸ்தானில் தற்போது நடைபெற்று வரும் அதிகாரப் போராட்டத்தில் ஜனாதிபதி ரபானி தலைமையிலான அரசாங்கப் படைகள், முன்னாள் பிரதமர் ஹெக் மத்தியார் தலைமையிலான படைகள், வடக்கே உஸ்பெக் (Uzbek) இனத்தவரான யுத்தப் பிரபு அப்துல் ரஷீட் டொஸ்ரம் (Abdul Rashid Dostam) தலைமையிலான படைகள் மற்றும் ஒன்பது சிறு முஜாஹிதீன் இயங்கங்கள் ஈடுபட்டுள்ளன.

இந்த இயக்கங்களும் அமைப்புக்களும் பெரும்பாலும் இன ரீதியானவையாக இருப்பதினாலேயே ஆப்கானிஸ்தான் பிரச்சினை மேலும் சிக்கல் வாய்ந்ததாக இருந்து வருகிறது. ஜனாதிபதி ரபானி தஜிக் இனத்தவர்.

### பின்னணியில் பாகிஸ்தான்?

தலிபான் இயக்கம் எப்படி உருவானது என்பது இன்னும் மர்மமாகவே இருந்து வருகிறது.

ஆப்கானிஸ்தானின் கண்டஹர் (Kandahar) மாகாணமே இந்த இயக்கத்தின் பிறப்பிடம்.

கண்டஹர் மாகாணம் முன்னாள் பிரதமர் ஹெக்மத்தியாரின் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த சமயம் கடந்த ஜூலை மாதம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் கற்பழிக்கப்பட்டனர் என்றும்—

இதற்குக் காரணமான படை வீரனைத் தேடிப்பிடிக்கும் முயற்சியில் மத பாடசாலை ஒன்றைச் சேர்ந்த தீவிரவாத மாணவர்கள் ஈடுபட்டனர் என்றும்—

இறுதியில் அந்த படை வீரன் மாணவர்களினால் கொலை செய்யப்பட்டான் என்றும்— தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதிலிருந்து உருவானதே தலிபான இயக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் தலிபான் இயக்கம் வைத்துள்ள கனரக ஆயுதங்கள், இயக்க உறுப்பினர்கள் பெற்றுள்ள ஆயுதப் பயிற்சி ஆகியவற்றை நோக்கும் போது பாகிஸ்தானின் புலனாய்வுத்துறை (Inter Services Intelligence) இதில் சம்பந்தப் பட்டிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் சோவியத் ராணுவ தலையீட்டுக்கு எதிராக முஜாஹிதீன் இயக்கங்கள் கெரில்லாப் போர் நடத்திய காலத்தில் பாகிஸ்தான் புலனாய்வுத்துறை மூலமே அமெரிக்கா முஜாஹிதீன் கெரில்லாக்களுக்குத் தேவையான ஆயுதங்களையும் மற்றும் உதவிகளையும் வழங்கி வந்தது.

தற்போது ஆப்கானிஸ்தானில் அமைதி நிலவுவது பாகிஸ்தானின் முன்னேற்றத்துக்கு அவசியமானது என்று பாகிஸ்தான் கருதுகிறது.

ஆகவே தலிபான் இயக்கத்தைப் பலப்படுத்தி ஆப்கானிஸ்தான் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வர பாகிஸ்தான் முயற்சிக்கலாம்

### ஈரான் - பாகிஸ்தான் வர்த்தகப் போட்டி

அராபியன் கடலில் இருந்து மத்திய ஆசியக் குடியரசு வரையிலான வர்த்தகப் பாதையைத் திறப்பதில் ஈரானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் கடுமையான போட்டி இருந்து வருகிறது.

தலிபான் இயக்கத்துக்கு ஆதரவு வழங்குவதாக பாகிஸ்தான் மீதும் சவூதி அரேபியா மீதும் ஈரான் அண்மையில் குற்றஞ் சாட்டி இருந்தது. ஆப்கானிஸ்தானில் ஷியா [Shiia] முஸ்லிம்கள் தாக்கப்பட்டால் தான் பார்த்துக்கொண்டிருக்கப் போவதில்லை என்றும் ஈரான் சமீபத்தில் எச்சரித்திருந்தது.

### ஈரானிய பாணியில்

பெரும்பாலும் பஸ்துன் (Pashtun) இனத்தவர்களைக் கொண்ட தலிபான் இயக்கம் ஈரானிய இஸ்லாமிய புரட்சியின் பாணியிலேயே சென்று கொண்டிருக்கிறது.

ஆனால் மேற்கு நாட்டு எதிர்ப்பு உணர்வு அதற்கு இல்லை. இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களில் பலர் பாகிஸ்தானின் பலுசிஸ்தான், வடமேற்கு புரொண்டியர் மாகாணங்களில் உள்ள அகதிகள் பாடசாலைகளில் இருந்து வந்தவர்கள். இயக்கம் தனது முழுக்கட்டுப்பாட்டில் இருந்து வரும் கண்டஹர் மாகாணத்தில் இஸ்லாமிய சட்டங்களை கடுமையாக அமுல் செய்து வருகிறது.

ஆண்கள் சவரம் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. பெண்கள் பர்தா அணிந்தே வெளியே செல்ல வேண்டும் தனியாகவும் செல்ல முடியாது.

அத்துடன் பட்டம் விடுதல் செஸ்விளையாட்டு ஆகியவற்றுக்கும் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது

### அதிகாரப் பகிர்வே ஒரே வழி

தற்போதைய நிலையில் ஆப்கானிஸ்தானில் அதிகாரப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் சகல தரப்பினரையும் அதிகாரப் பகிர்வு மூலமே சமரசத்துக்கு இணங்க வைக்க முடியும்.

ஜனாதிபதி ரபானி பதவி விலகி ஏற்படுத்தப்படும் இடைக்கால அரசில் தலிபான் இயக்கமும் இடம் பெற்றால் மாத்திரமே உண்மையான சமாதானத்தை ஏற்படுத்த முடியும். ★

-சஞ்சாரன்-

---


யாழ். மாவட்ட
அரச ஓய்வூதியர் சங்கம்

பதிவு இல: T83

மேற்படி சங்கம் 484. காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத என்ற முகவரியில் இயங்குகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

க. சி. நமசிவாயம் — செயலாளர்
சு. இ சண்முகரத்தினம். — தலைவர்
(சி/5790)



## புதிய வகுப்புக்கள்

Cake Icing (கேக் ஐசிங்), Sugar Craft (மாச்சீனி அலங்காரம்), Fondant Icing (மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள்), Make up and Hair Dressing (ஒப்பனைக்கலையும், தலை அலங்காரமும்), Flower Making (Silk Ribbon, Stocking Net) மலர்ச்செண்டுகள் (Bouquets) தயாரித்தல்.

16-04-1995 முதல் ஆரம்பமாக இருக்கின்றன.

தொடர்பு கொள்ளவும்:

YOGI HOME SCIENCE ACADEMY
நாயன்மார் வீதி,
கச்சேரி நல்லூர் றோட்,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர், யாழ்ப்பாணம். (சி-635)


### புலிகளின் குரல் வானொலியில்

26 — 03 — 1995

**ஞாயிறு இரவு**

- ★ 8-02 — இசையரங்கம்— திருமதி. மலர்விழி கனகசபையின் வீணைக் கச்சேரி
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர் நாடகம்— கருணைரவி எழுதும் "காணி நிலம் வேண்டும்" அங்கம் 5

27 — 03 — 1995

**திங்கள் காலை**

- ★ 7-02 —மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி ஒலிபரப்பு

**ஞாயிறு மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக்கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — கதம்பம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 26

ஏழாலை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் மாதந்தோறும் நடத்தும் அறிவியற் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

திரு. கு. சூரியகுமார் தலைமையில் நடைபெறும் இன்றைய கருத்தரங்கில் "யாழ்ப்பாணத்தில் தமிழ் நாடகங்கள்" என்னும் பொருளில், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எஸ். ஜெய்சங்கர் கருத்துரை வழங்குவார். (ஒ-5)

### புகையிலை அறுவடை

வடமராட்சிப் பகுதியில் புகையிலை அறுவடை மிக வேகமாக நடைபெற்று வருகிறது.

ஒரு புகையிலை மரம் அதி உச்ச விலையாக 75ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மிகக் குறைந்த விலையாக 30ரூபாவுக்கு விற்பனையாகிறது.


G. C. C.
JAFFNA CONSULTATION CLINIC
514/14, Hospital Road, Jaffna.
(பழைய O. P. D. முன்பாக)

சகல விதமான வைத்திய ஆலோசனைகளும் வைத்தியமும் நடைபெறுகின்றன.
பல், கண் சிகிச்சையும் பல் கட்டுதல், அடைத்தல், கிளிப் போடுதல் என்பனவும் செய்து கொடுக்கப்படும்.

நிர்வாகி

(35896)


## இறையன்பில் இணைந்த 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 21 — 10 — 1950

உதிர்வு: 27 — 03 — 1984

**R. A. FRANCIS RANASINGHE**

Police Sergeant (PS. 3603)
Jaffna Police Station

''ஜீவியத்தில் நேசித்தவர்களை மரணத்திலும் நினைவுகூருவோம்''

இவரின் ஆன்ம சாந்திக்காக பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை (27 - 03 - 1995) காலை 6-00 மணிக்கு துக்கத் திருப்பலி பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

என்றுமே நீங்காத நினைவில்:
குடும்பத்தினர்.

தண்டி றோட்,
கொழும்புத்துறை.

[35894]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடியில்: 08 — 11 — 1961

ஆண்டவன் அடியில்: 24 — 02 — 1995

**திருமதி சிவராசா சுகுணாம்பிகை**

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காக இருந்து 24-02-1995 அன்று எம்மையெல்லாம் அதிர்ச்சிக்குள்ளாக்கி சிவபதமடைந்த அமரர் சுகுணாம்பிகை அவர்களின் மோட்ச தீப வைபவம் இன்று [26-08-56] ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட முறையில் அழைப்பிதழ்கள் தர முடியாமைக்கு வருந்துகின்றோம்.

ஆறாத்துயரில் வாடும்:
கணவன், பிள்ளைகள்.

காங்கேசன்துறை வீதி,
மல்லாகம்.
26-03-95

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 25 — 10 — 1922

மறைவு: 06 — 04 — 1994

**அமரர் கந்தையா மார்க்கண்டு**

திதி: 26 – 03 – 1995

ஓராண்டு சென்றாலும் எம்
உள்ளத்தில் வீற்றிருக்கும்
எங்கள் அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
உங்கள் குல தெய்வங்களை
வேண்டி நிற்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

96, பத்திரகாளி கோவிலடி,
வண் வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

[35880]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் மண்டல அபிஷேகப் பூர்த்திவிழா சிறப்பு மலர்

26 - 03 - 1995

## கருணையும், அருளும் அள்ளிப் பொழியும் பத்திரகாளி அம்பாள்; இயந்திரமாக நிலத்தில் நிரந்தர இடம் கொண்டது அவள் தலவரலாறு

சிவநெறியும் செந்தமிழும் செழுமையுடன் திகழும் ஈழமணித் திருநாட்டின் தலையென விளங்கும் யாழ்ப்பாணம் நற்பதியின் வடமேற்கே, யாழ். காரைநகர் பிரதான வீதியின் பதினான்காவது கிலோ மீற்றர் தொலைவில் வயலும், கனையும், கோவிலும், குளமும், கடலும், காடும் சார்ந்து மருதமும் முல்லையும், நெய்தலும் விரவி இருப்பது சுழிபுரம் என்னும் தொல்பதி.

இப்பழம்பதி பரந்த பெரும் நிலப்பரப்பையுடையதாக இருப்பதனால் இது மேற்கு, மத்தி, கிழக்கு என மூப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மேற்கு திருவடிநிலை என்றும் புனித தீர்த்த தலமுடைய கடற்பரப்பை உடையது. மத்தி மரகதக் கம்பளம் விரித்தாலன்ன பழமை நிறைந்த பழனங்களையும், சரித்திரப் புகழ் வாய்ந்த காக்கைப் பிள்ளையென்றும் சின்னத்தம்பிப் புலவரினால் புகழ்ந்து பாடப்பெற்ற பறாளாய் விநாயகர் பள்ளின் கதாநாயகனின் திருத்தலத்தையும், பறாளாய் முருகன் திருத்தலத்தையும் உள்ளடக்கியதாக விளங்குகின்றது.

கிழக்குப் பல்வேறுபட்ட தொழில்கள் செய்து வாழும் மக்கள் குறிச்சிகளைக் கொண்டது. இதில் உழுதுண்டு வாழ்பவர்களே அனேகர். இம்மக்கள் தம் தம் வாழ்வின் நலன் கருதி தம் சமூக முன்னேற்றத்துக்காக அறிவு வளத்திற்கு வித்தியாலயங்களையும், அருள் வளத்துக்கு ஆலயங்களையும் அமைத்துள்ளனர்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழிக்கிணங்க ஆன்மாக்களோடு சேர்ந்தும், தனித்தும் நின்று இலங்கியும், இயக்கியும் உயிர்களை உய்விக்க வழிகாட்டி ஆட்டி அடங்குவிக்கும் இறைவனுக்கு உயிர்கள் தப்பொருட்டு ஆலயம் அமைத்தலும், அமைத்த ஆலயத்தைப் புதுப்பித்தலும் பூசை முதலிய நித்திய நைமித்திய கருமங்களைக் குறைவறச் செய்தலும், பதிநல் வினையென ஆகம நூல்கள் கூறுகின்றன. அவ்வாறான ஒரு நற்பணியை சுழிபுரம் கிழக்கில் வாழும் குறிப்பாக மரத்தை, இரும்பை மூலப்பொருள்களாகக் கொண்டு தொழில்புரியும் விஸ்வப்பிரம குலத்தினர், தம் குறிச்சி நடுவே, சக்திக்கு ஓர் ஆலயம் இற்றைக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னே கண்டனர்.

### கிளுவை மரத்தடியில் இயந்திரத் தகடு

இவ்வாலயம் உருப்பெற்ற சரியான காலம் எம்மால் கண்டுகொள்ள முடியவில்லை. கர்ண பரம்பரைக் கதையாக, செவி வழக்காக நாம் அறிந்ததை இங்கு தருகின்றோம்.

போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்ட காலத்துக்கு முன்னர் ஒரு சிவன் முத்தர் இப்பகுதிக்கு இந்தியாவில் இருந்து வந்தார். அவர் இங்கு வந்தபோது இப்போது பத்திரகாளி அம்பாள் இருக்கும் தலத்திலே மண்ணாலான ஒரு நாற்சார்வீடு இருந்தது. அந்த வீட்டின் முன்றிலில் ஒரு கிளுவை மரம் நின்றது. அவ்வடியார் அக்கிளுவை மரத்தடியே தன்னுடன் கொண்டு வந்திருந்த இயந்திரத் தகட்டைப் பிரதிட்டை செய்து, மிக்க மெய்யன்போடு காலை, மாலை நியமம் தவறாது பூசைசெய்து வரலாயினார்.

காலைப் பொழுது புலர்வதன் முன் துயிலெழுந்து நித்திய கடன்களை குறைவற முடித்து இயந்திரத்துக்குப் பூசை செய்த பின் இவ்விடத்தை விட்டு வெளியே சென்று விடுவார். அதன்பின் அவரது செயற்பாடு எது என்பது எவருக்குமே புரியாத புதிர். ஆனால் மாலையானதும் மறுபடியும் அங்கே வருவார். தன்னையும் சூழலையும் சுத்தி செய்து சந்தியாவந்தனம் முடித்துக் கொண்டு அந்தத் தெய்வீக யந்திரத்துக்குப் பூசை செய்வார். பின் ஆவின் பாலையே சிறிது ஆகாரமாக அருந்தி விட்டு உறங்கி விடுவார். இதுதான் அவரது வாழ்க்கை முறையாக இருந்தது.

ஒருநாள் வழமைபோல் அவர் தம் காலைப் பூசையை முடித்துக் கொண்டு வெளியே புறப்பட்டார். மாலையானதும் தலத்துக்குத் திரும்பி வந்தார். தன் கடன்களை முடித்துக் கொண்டு பூசைக்காக இயந்திரம் இருந்த இடத்திற்குச் சென்றார். அங்கே அவர் கண்ட காட்சி! அவரை அதிரவைத்தது. அவர் அதுவரை பூசித்து வந்த அத்தெய்வீக இயந்திரத் தகடு நிலத்துள் வே இறங்கி விட்டது. இது கண்ட அவர் தனது ஞானதிருஷ்டியினால் அம்பாள் சித்தத்தை அறிந்து கொண்டார் உடனே அத்தலத்தின் சூழலிலே வாழ்ந்த மக்களை அழைத்து ஓர் உண்மையை உணர்த்தினார்.

தான் இதுவரை பூசித்து வந்த இயந்திரம் பத்திரகாளி அம்பாள் என்றும், அச்சக்தி இவ்விடத்தில் நிலைத்திருந்து மக்களுக்கு அருள்பாலிப்பாள் என்றும், ஆகவே இவ்அம்பாளை ஆதரித்து அருள் பெறுமாறு கூறி, வழிபாட்டு முறைகளையும் கூறி, அச்சிவன் முத்தர் அவ்விடம் விட்டகன்றார். அதன்பின் அவரைக் கண்டு கொள்ள எவராலும் முடியவில்லை.

### ஓலைக் குடிலில்

பின்னர் அச்சூழலில் உள்ள மக்கள் மிகவும் பக்தி சிரத்தையுடன் அக்கிளுவை மரத்தை உள்ளடக்கிய நிலப்பரப்பில் ஓர் ஓலைக்குடிலில் ஆலயம் அமைத்தனர் பயபக்தியுடன் தீபம் ஏற்றிப் பொங்கல் செய்து படைத்துப் பாடிப் பரவி மகிழ்ந்தனர். அம்பாளும் அங்கு இனிது அமர்ந்து தன்னை நாடிவரும் அடியார்களுக்கு அருள்பாலித்து அற்புதங்கள் பல புரிந்து வந்தாள். இப்படியே பல வருடங்கள் நடைபெற்றன.

இப்படி இருக்கும் காலத்தில் எக்காரணங்கொண்டோ அந்த ஓலைக்குடில் தீவாய்ப் பெற்று எரிந்து சாம்பராயிற்று, இது கண்ட அடியார்கள் துன்பம் மீதுரப்பெற்று அம்பாளுக்கு மண்ணாலான ஒரு கோயிலைச் சமைத்து வழிபட்டுத் தமது கருமங்களை ஆற்றினர்.

அதன் பின், அம்பாள் கடாட்சமும் திருவருட்பேறும் இருந்தவாறு என்னவோ, அக்கோயிலின் தென்புறத்தே வாழ்ந்து வந்த மெய்யடியாரான தெய்வபக்தர் திரு. சின்னத்தம்பி குமரேசு என்பவர் தன் தொழில் விடுத்து அம்பாளுக்குப் பூசகர் ஆனார். அக்காலத்தில் அம்பாளின் அருள் மேன்மேலும் பொலிவுற்றுத் திக்கெட்டும் பரவியது எனலாம்.



இலங்கை அடங்கிலும் இருந்தும் மக்கள் இங்கு வருகை தந்து அம்பாளை வழிபட்டு தமது நேர்த்திகளைச் செய்து தேவையானவற்றை அம்பாளிடமிருந்து பெற்றுச் சென்றனர். அம்பாள் கிருபா கடாட்சத்தினால் அப்பூசாரியினுடைய கைராசி, பக்தர்களிடையே தெய்வ நம்பிக்கையை ஊட்டியது. குழந்தைகளுக்கேற்படும் திடுக்காட்டியம் பிணி முதலிய வியாதிகளுக்கு அப்பூசகர் வீபூதி இட்டுப் பார்வை பார்த்தால் அது நீங்கிவிடும் மக்களும் இதில் நம்பிக்கை கொண்டனர். பெரியவர்களும் தங்கள் உடலில் ஏற்படும குறைபாடுகளுக்கு ஓதிப்பார்க்கவும் நூல் கட்டி நிவாரணம் பெறவும் அப்பெரியாரை நாடினர்.

### அம்பாளுக்கு கற்கோயில்

இப்படியே நாளாக ஆக அம்பாளின் ஆலயத்தில் பக்தர் வெள்ளம் கரைபுரண்டது. இதன்போது அப்பெரியார் அம்பாளுக்கு ஒரு கற்கோயில்காண வேண்டுமென்று பேரவா உந்தப் பெற்றார். திருப்பணி வேலைக்கான நிதி திரட்டும் நற்பணியில் ஈடுபட்டார். பக்தர்கள் போதிய அளவு ஆதரவு நல்கினர்.

இருப்பினும் நிதிபற்றாக் குறை ஏற்பட்டது அம்பாளின் சித்தமோ என்னவோ நிதிபற்றாக்குறையை மலேசியா, சிங்கப்பூரில் உள்ள அம்பாளின் அடியார்கள் அறிந்து கொண்டனர். அவர்கள் சின்னத்தம்பி குமரேசு என்னும் இப்பூசகரை நிதி திரட்டும் பொருட்டு மலேசியா வரும்படி அழைத்தனர். இவ்வழைப்பை அம்பாளின் அழைப்பாகக் கருதிய இப்பூசகர் அக்காலத்தில் மலேசியா நாடு சென்றார்.

பக்தர்கள் இவரை வரவேற்றுப் போதிய நிதியைச் சேர்த்து உதவினர். போதிய பணத்துடன் தாய்நாடு மீண்ட இப்பெரியார் ஆலயச் சூழலில் உள்ள ஏனைய மக்களையும் சேர்த்து "வெள்ளை வைரக்கல்லால்" அம்பாளுக்கு ஆலயம் அமைக்கத் தொடங்கினார் வசதிகள் குறைந்த அக்காலத்தில் மட்டுவில் போன்ற இடங்களிலிருந்து வெள்ளை வைரத்தைத் தருவித்தும், சுன்னாகத்தில் இருந்து கோயில் கட்டு சிற்பிகளை அழைத்து வந்துப் வேலைகள் துரிதகெதியில் நடைபெற்றன.

இப்படி நடைபெறும் காலத்தில் நிதிநிலை குன்றத் தொடங்கியது. மலேசியாவில் இருந்து கொண்டு வந்த பணமும் இங்குள்ள மக்கள் தாராளமாக வாரி வழங்கியவையும் தீர்ந்து விட்டன. செய்வதறியாது இப் பூசாரியார் மிக்க பணமுடையில் வாடினார். அம்பாளின் திருவுளப்படி மீண்டும் மலேசியா நாடு செலலச் சித்தம் கொண்டார்

மலேசியாவில் வாழ்ந்த மெய்யடியார்கள் பலர் இப் பூசகரைப் பெருவிருப்போடு உபசரித்துப் போதிய நிதியையும் திரட்டிக்கொடுத்தனர். (இதன்படி இப்பூசகர் மீண்டும் பலமுறை இக்கைங்கரியத்துக்காக மலேநாடு சென்றார் எனத் தெரியவருகிறது.) தாய்நாடுதிரும்பிய இவ்வடியார் ஆலயச்சூழலில் வாழ்ந்த அடியவர்களின் பூரண ஒத்துழைப்புடன் ஆலயக் கட்டட நிர்மாணவேலைகளைக் குறைவற நிறைவாக முடித்தார். அம்பாளைத் திருமுழுக்காட்டி மகா கும்பாபிஷேகம் செய்து கற்கோவிலுள் அம்பாளை எழுந்தருளச் செய்து தானே அம்பாளுக்கு நிவேத்தியம் வைத்துப் பூசை செய்து பரவினார்.

தொடர்ந்தும் இவரே பூசகராகவிருந்து அம்பாளுக்குப் பணிசெய்ததுடன், அடியார்களின் குறைகளையும் அம்பாளின் துணை கொண்டு தீர்த்து வந்தார். அச்சூழலில் வாழும மக்களின் அன்பும், அறிவும், பண்பும், பெருமையும், வீடும் வாசலும் வீரமும் வெற்றியும், ஆக்கமும், ஆற்றலும் ஆகிய இகபரம் இரண்டிற்கும் ஏதுவான எல்லா வளங்களும பெறச் செய்து மகிழ்ந்தார். இங்ஙனமாக அம்பாளைப் பூசித்துவந்த பூசாரியாருக்குக் காலப்போக்கில் இயலாமை தொடங்கியது.

### இரண்டாவது மகா கும்பாபிஷேகம்

இதையறிந்த ஆலயச் சூழலில வாழ்ந்த இவரது உறவினரான திரு. சிற்றம்பலம் ஆசைப்பிள்ளை அவர்கள் ஆலய நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். இவரும் அம்பாளை நன்முறையில் பூசித்து ஆலய நிர்வாகத்தை நன்கு பரிபாலித்து வந்தார். இவரது காலத்திலும் அம்பாளின் ஆலயம் புதுப்பொலிவைப்பெற்றுப் பல ஆக்கபூர்வமான பணிகளைக் கண்டது. ஆலயத்தைப் புதுப்பித்து பண்டிகை வேலைகள் செய்து சிற்பங்கள் வைத்து மெருகூட்டி இரண்டாவது மகாகும்பாபிஷேகம் செய்து மகிழ்ந்தார்.

தற்போது ஆலயத்தின் முன்றிலில் கம்பீரமாகக்காட்சியளிக்கும் முற்கொட்டகை, இவரது காலத்தில், இவரது விடா முயற்சியின் பயனாய் உருவானதாகும்.

இந்நாளில் இவரது உறவினரான மூவர் (உடுவிலைச் சேர்ந்தவர்கள்) அம்பாளின் ஆலயத்தில் உரிமை கோரி தாங்களும் தர்மகர்த்தாக்களாக இணைந்து கொண்டனர். இந்நான்கு தர்மகர்த்தாக்களும் சேர்ந்து ஆலய நிர்வாகத்தைச் சீராக நடத்தி வந்தனர். திரு சிற்றம்பலம் ஆசைப்பிள்ளை அவர்கள் ஆலயத்தின் பின் வீதியில் வசித்து வந்தபடியினால் அவர் தானே முழுப்பொறுப்பையும் ஏற்று ஆலய நிர்வாகப் பணியை நன்கு பரிபாலித்து வந்தார். இவரது மறைவுக்குப் பின்னர் இவரது புத்திரர்கள் தந்தையின் அறப்பணியைத் தாம் சிரமேற்கொண்டு அம்பாளின் பூசை முதலிய திருப்பணிகளை குறைவற நடத்தி வந்தனர்.

### பரிபாலன சபை

நாளடைவில் காலத்தின் மாற்றத்துக்கேற்ப தாங்களும் ஒழுக வேண்டுமென்ற சிறிய லோரையும் உள்ளடக்கிய தேவஸ்தானப் பரிபாலன சபை ஒன்றை 1975 ஆம் ஆண்டு உருவாக்கினர் தர்மகர்த்தாக்கள் நால்வரில் ஒருவரே எந்நாளும் சபையின் தலைவராய் இருப்பர் என்ற கோட்பாட்டுக்கமைய இச்சபை உருவானது. சபையின் முதலாவது தலைவர் அமரர் திரு இ சுந்தரம் அவர்களாவார்.

தேவஸ்தானப் பரிபாலன சபையினரும் யாவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் மிகச் சிறப்பாகச் செயற்படத் தொடங்கினர். புதியமகோற்சவங்களை ஆகமவிதிப்படி ஆரம்பித்து, அம்பாளின் அருளை மக்கள் யாவரும் அனுபவிக்கச் செய்தனர். கிடைக்கும் நிதியை ஒன்று திரட்டிக் காலத்துக்குக் காலம் பலதிருப்பணி வேலைகளைச் செய்தனர். அம்பாளுக்கு மூன்று காலப் பூசை ஒருகுறிப்பிட்டநேரத்திற்கு நியமம் தவறாது நிகழும் நடப்பதற்கு ஏற்றஒழுங்குகளை மேற்கொண்டனர். ஆலயக்

### தேவஸ்தான பரிபாலன சபை

நோக்கத்திற்கிணங்க திரு. சிற்றம்பலம் ஆசைப்பிள்ளையின் மைந்தர்களும் உடுவிலைச் சேர்ந்த மற்றும் மூன்று தர்மகர்த்தாக்களான திருவாளர்கள் கணவதிப்பிள்ளைபொன்னையா, இராமலிங்கம் சுந்தரம், சின்னப்பு கனகசபை ஆகியோர் சேர்ந்து ஆலயச் சுழலைச் சேர்ந்த தம் இன மக்களை அழைத்து தங்களுடன் சேர்ந்து எல் கருமங்கள் யாவும் ஒருசீராக நடப்பதற்கு நிரந்தரமான காரியஸ்தர் ஒருவர் ஆலயத்துக்குத் தேவை என்பதை உணர்ந்து அத்தேவையை நிறைவு செய்தனர். அம்பாளின் அடியார்களும் தேவஸ்தானப்பரிபாலன சபையினரின் முன்மாதிரியான திட்டங்களுக்குப் போதிய ஆதரவு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய விழா நிகழ்ச்சிகள்

நிகழும் பவ வருடம் பங்குனி மாதம் 12ஆம் திகதி இன்று (26-3-95 ஞாயிற்றுக்கிழமை பகல் அம்பாளுக்கு நவோத்திர சகஸ்ர (1009) சங்காபிஷேகமும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு (அஷ்டோத்தர சத) 108 சங்காபிஷேகமும் நடைபெற்று விசேட பூசையைத் தொடர்ந்து கும்பாபிஷேக மலர் வெளியிடப்படும்.

தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும்.

மாலை 6 மணிக்கு அம்பாள் திருவூஞ்சல் ஆடி, அழகிய அன்ன வாகனத்தில் ஆரோகணித்து வீதிவலம் வரும் காட்சி இடம்பெறும்.

அடியார்கள் அனைவரும் வந்து அம்பாளைத் தரிசித்து அருளைப் பெறுமாறு கேட்டு நிற்கின்றோம்.

### ✶ கிரியாகால நிகழ்ச்சி ✶

பவ வருடம் பங்குனி மாதம் 11 ஆம் திகதி (25-3-95) சனிக்கிழமை மாலை 5 மணிக்கு விநாயக வழிபாடு. அனுஞ்ஞை கடம்பதாபனம், சங்கேஸ்தாபனம், யாகபூசை, அக்னி முகாந்தம்.

**பங்குனி மாதம் 12ஆம் திகதி (26 - 3 - 95) ஞாயிறு:**

- ★ காலை 7 மணி — புண்ணியா நவாசனம், சங்கு பூசை ஹோமம், தாரா ஹோமம் பூர்ணகுதி தீபாராதனை
- ★ முற்பகல் 10-30 மணி — கும்பம் வீதியுலா.
- ★ நண்பகல் 12-00 மணி — விசேட பூசை.
- ★ பிற்பகல் 1-00 மணி — நூல் வெளியீடு.
- ★ பிற்பகல் 1-30 — அன்னதானம்.
- ★ மாலை 6-00 மணி — திருவூஞ்சல் தீபாராதனை.
- ★ இரவு 8 மணி — தெரு வீதியுலா.

சுதுமலை சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள் (கிரியா காலாப முத்தாமணி, வேத சிவாகம தத்துவநிதி) (நயினை) அவர்களின் தலைமையில் சங்காபிஷேக கிரியைகள் ஏனைய குருமாரின் உதவியுடன்நடைபெறும்.

இங்ஙனம்;
பரிபாலன சபை,
சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்.

குறிப்பு:- ஈழத்தின் தலைசிறந்த பிரபல நாதஸ்வர தவில் கலைஞர்களின் கச்சேரிகள் இடம்பெறும்.

அம்பாள் களஞ்சியம்
சில்லறை வியாபாரம்
பிரதான வீதி, வழக்கம்பரை, சுழிபுரம்.

சக்தி
வியாபார நிலையம்
வழக்கம்பரை, சுழிபுரம்.

மல்ரி சொப்
(Multi Shop)
வழக்கம்பரை, சுழிபுரம்.

சிறீ வ. இ. வ.
வர்த்தக நிலையம்
(V. R. V.)
192, பிரதான வீதி, சுழிபுரம்.

சிவா வெதுப்பகம்
பிரதான வீதி, தொல்புரம் கிழக்கு, வழக்கம்பரை, சுழிபுரம்.

ரட்ணம்ஸ்
புடைவை மாளிகை
பிரதான வீதி, சுழிபுரம்

கமலேஸ்வரி
விற்பனை நிலையம்
KAMALESWARY SALES CENTRE
162, K.K.S. Road, Jaffna.
162, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

லிங்கம் கிறீம் ஹவுஸ்
அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

சிவசக்தி
கடைச்சல் தொழிற்சாலை
அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: துரைசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(விளம்பர இல: சி/845)

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Sony Set ஜெனரேட்டர் [Honda500W] கமரா [Kodak] என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: S. பஞ்சலிங்கம், முத்துக்கிருஷ்ணர்வீதி, கன்னாகம். [8296]

புதிய M 1,000 [National] வீடியோ கமரா விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 12A, கந்தபுராண வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [35886]

கந்தர்மடம், பலாலி றோட்டில் இரண்டு லாச்சம் காணி விற்பனைக்குண்டு. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 770, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [35890]

ஹைலைன், லேமன் சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் தொகையாகத் தேவைப்படுபவர்கள் முன் கூட்டியே பதிவு செய்து மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். மல்வம் வீதியூடாக, சிங்கம் வீதி, உடுவில். [35891]

8x4 — 1½ நூல தடிப்புள்ள இரும்புத்தகடு, 8x8x4 சன அடி தண்ணீர்த் தாங்கி, உருளை வடிவ தண்ணீர்த் தாங்கி என்பன விற்பனைக்குள்ளன. 'மிலக்வைற்' [சி-844]

## கோழி விற்பனைக்கு

குறைந்த விலையில் விறாத்துக் கோழிக்குஞ்சும், 6 கிழமை நிரம்பிய நல்ல இன சேவல் குஞ்சும் விற்பனைக்குண்டு. 54/2, சந்தானமாதா (சந்தானர்) கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம். [35888]

## கோழிக்குஞ்சு விற்பனை

Christombu Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் பதிவுசெய்து 2-4 95 ஞாயிற்றுக்கிழமை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (35861)

## இறைச்சிக்கோழி விற்பனை

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் விற்பனை நிலையம் எங்களுடையதல்ல. உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர்ப் பலகையுண்டு. நல்லூர் வீடியோ சென்ரர். (35860)

## தேவை

வைத்தியசாலையில் உதவியாளராக கடமையாற்றுவதற்கு பெண்பிள்ளை தேவை. முன் அனுபவம் இருந்தால் விரும்பத்தக்கது Dr க சிவனடியான், நவாலி தெற்கு, மானிப்பாய். [35872]

## இலங்கை திருமண சேவை

பராஜஸ் பரஜா உரிமையுடைய Restaurant உரிமையாளர் வயது 27, உதயச் செவ்வாய் நட்பு. கி. பா.8-36 மணமகனுக்கு பூரம், சதயம், சித்திரை, அவிட்டம், திருவாதிரையில் மணப்பெண் தேவை விமலா, நாச்சிமார் கோவலடி. [35856]

## மில்க்வைற்

மில்க்வைற் சலவைத் தூள் வன்நீரில் திறமையாகச் செயற்படுகிறது. சக்திமிக்க அதன் நுரைவளம் இழைகளினூடே துரிதமாகச் செயற்பட்டு அழுக்கோடு எண்ணெய்ப் பிசுக்கையும் அகற்றுகிறது. 50கிராம் சலவைத் தூள் மட்டைகள் 300 சேர்ப்பித்து துவாய் ஒன்று அன்பளிப்பாகப் பெறலாம். "மில்க்வைற்". [சி-837]

## தவறிவிட்டது

23-03-95 மாலை குளப்பிட்டி வீதியில் அல்லது ஆனைக்கோட்டை சந்தியில் சிறிய மோட்டார் மெக்கானிக் புத்தகம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். சோபி சைக்கிள் வேக்ஸ், குளப்பிட்டி வீதி, உயரப்புலம் ஆனைக்கோட்டை. [8452]

## மணமகன் தேவையா?

எம்மிடம் மணமகன் பலர் இருக்கிறார்கள். செவ்வாய்க் குற்றமற்ற. 33 வயது. டாக்டருக்கு பெண் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (35871)

## கணக்காளர் தேவை

யாழ் நகரிலுள்ள தொழில் நிறுவனத்திற்கு சிறிய கணக்குகள் பார்ப்பதற்கு பெண் கணக்காளர் தேவை. காலை 8-00 மணிக்கு முன் நேரில் வரவும். சாயி இல்லம், இல. 68A, ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [35834]

## வாங்கிவிட்டீர்களா?

காட்சிக்கும், பலனுக்கும் சரிவரும் திருக்கணித பஞ்சாங்கம் எதிர்வரும் புதுவருட பிரதி விற்பனையாகிறது. ஏமாற்றத்தைத் தவிர்க்க இன்றே பெற்றுக் கொள்ளுங்கள். எல்லா புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். திருக்கணித நிலையம், மட்டுவில். [35759]

## கோழிக் குஞ்சுகள்

தூய வளர்ச்சியடையும், [Loman] சேவல் குஞ்சுகள் 30-03-95இல் விநியோகிக்கப்படும். குஞ்சொன்றின் விலை ரூபா 15/- முன் கூட்டியே பதிவு செய்தவர்களும் பெற்றுக் கொள்ளலாம். மல்வம் வீதியூடாக சிங்கம் வீதி, உடுவில் [35892]

## பயிற்சி வினாத்தாள்கள்

முதலாம் தவணைப் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் ஆண்டு 3 தொடக்கம் O/L வரை எல்லாப் பாடங்களுக்கும் யாழ். Bond கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன எல்லா பிரபல புத்தக நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (8390)

## மிருதங்கம்

புதிய மிருதங்கம் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. திருத்த வேலைகளும் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், இல. 192/1. நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி யாழ்ப்பாணம் [35831]

## மனித உயிரியல்

மனித உயிரியல் I கே. டி. அருட்பிரகாசம், வை என். ஏ. ஐயதுங்க விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-640]

## மகாதேவா ஜோதிடம்

குறிப்பு எழுதுதல், கை, மனை பார்த்தல் ஆகியவற்றிற்கு ஜோதிடரை இல. 140, செல்லர் வீதி, கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகாமையில் எனும் முகவரியில் தினசரி சந்திக்கலாம். [35800]

## றோணியோ பிரதி

தேவையான முறையில் குறித்த தவணையில் றோணியோ செய்து கொடுக்கப்படுகிறது. 100 பிரதி இரண்டு பக்கமும் 30/- மட்டுமே. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி [வெலிங்டன் சந்திக்கருகில்] யாழ்ப்பாணம். [சி-628]

## காயத்திரி வெளியீடுகள்

ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 க்கான வே. நவமோகனின் இலகு தமிழ் இலக்கணம் (திருத்திய பதிப்பு) ரூபா 25/- மாற்றம் – முக்கிங்கள் சஞ்சிகை ரூபா 15/- எல்லாப் புத்தகசாலையிலும் கிடைக்கும் [35783]

## புலமைப் பரிசில் - 95

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக பொது உளச்சார்பு, பொது அறிவு பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு மாதமும் 2வது, 4வது ஞாயிற்றுக்கிழமையிலும் ஊக்குவிப்பு பயிற்சிகள் ஒவ்வொரு வாரமும் எம்மால் வெளியிடப்படுகின்றன. நேரில் / தபாலில் / பிரபல புத்தக நிறுவனங்களில பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (8357)

## சீயாக்காய்ப் பவுடர்

எந்தவிதமான இரசாயன பொருள்களும் சேர்க்கப்படாமல் ஆறு வகை இயற்கை பொருள்கள் சேர்த்து தயாரிக்கப்பட்டதுதான் காவேரி சீயாக்காய் பவுடர், கண் குளிர்மை, கூந்தல் வளர்ச்சிக்கு காவேரி சீயாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்கி பாவியுங்கள். (35708)

## சிரமதானம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ் மிட்ரவுன் றோட்ராக்ற் கழகத்தினர் கந்தர்மடம் ஆத்திசூடி விநாயகர் ஆலய முன்றிலை சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளனர். (இ)

## பிரதி செயலாளராக டிவகலாலா

யாழ்ப்பாணம், மார்ச். 26

வடக்கு- கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக திரு சு. டிவகலாலா கடந்த 13 ஆம் திகதி முதல் நியமனம் பெற்றுள்ளார்.

மாகாணசபை ஆளுநரான காமினி பொன்சேகா இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

தற்போது அவர்வகிக்கும் கூட்டுறவு ஆணையாளர் பதவியையும் அவர் தொடர்ந்து வகிப்பார். உத்தியோகபூர்வ அலுவலாக அவர் எதிர்வரும் 4ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார். (இ-3)


# விமான தொடர்புச் சேவை

## யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு

விமான தொடர் அம்பியூலன்ஸ் இணைப்பு

சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பயணப்பதிவு செய்யும் நேரம்:

காலை 9-00 முதல் மாலை 5-00 வரை

குறிப்பு:

நோயாளர்களுக்கும், வயோதிபர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

ஒரு வழிக் கட்டணம் ரூபா 3,500

[விமானக் கட்டணம் உட்பட]

தர்மிஷா ரவல்ஸ், குமரன் பயணிகள் விடுதி,

அறை இல. 6,

67, அருச்சுனா வீதி (ஸ்ரான்லி வீதி), யாழ்ப்பாணம்

குறிப்பு:- திங்கள், வியாழன் நாட்களில் மட்டும் சேவை நடைபெறும்.

## ஹோமியோபதி அக்குபங்சர் வகுப்புக்கள் ஆரம்பம்

திறந்த வெளி மாற்று மருத்துவ பல்கலைக்கழக சான்றிதழுக்கான அடுத்த ஹோமியோபதி, அக்குபங்சர் வார இறுதி வகுப்புகள் 1995 மே, 7ஆம் திகதி ஆரம்பமாகும். இதற்கான விண்ணப்பப் படிவங்களை காலை 9-00மணிமுதல் நண்பகல் 12-00மணி வரை கீழ்க்காணும் முகவரியில் பெற்று விண்ணப்பிக்கலாம்.

வடஇலங்கை ஹோமியோபதி சங்கம்

வடஇலங்கை அக்குபங்சர் சங்கம்

35, நாவலர்வீதி, (ஐந்துசந்தி), யாழ்ப்பாணம். [35843]

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

## THE JAFFNA EDUCATION CENTRE

(சாந்தி சினிமா முன்பாக)

O/L, A/L

Spoken English, Short Hand Typing

இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 27-3-1995

★ படிக்கும் மாணவர்களுக்கு அறை வாடகைக்கு உண்டு.

(8453) – நிர்வாகி.


## "மகர யாழ்" விருதை அலங்கரிக்கும்



வைத்திய கலாநிதி

து. வி. ஜெயகுலராஜா

(தலைவர், யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்)

மகர யாழ். இசை "ஜெயகுலராஜா

வாழ்க வாழ்க" என்றொலிப்பது கேட்டோம்

சிகர மாகஇம் மண்மிசை நிற்கும்

சேவை யாளநீ வாழ்க நீடூழி!

திருநெல்வேலி

கலாமன்ற சனசமூக நிலையம்

கலாசாலை வீதி,

திருநெல்வேலி வடக்கு. (35889)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 10 — 07 — 1910



உதிர்வு: 24 — 02 — 1995

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி நல்லம்மா சுப்பிரமணியம்

பாசத்திற்கோர் இருப்பிடமாய்
பண்பிற்கோர் உத்தமியாய்
வாழ்ந்து மறைந்து இன்றோடு
ஒரு திங்கள் சென்றதம்மா
அன்பின் பிறப்பிடமே
ஆருயிர்த்தாயே
அன்போடரவணைத்து
அமுதோடு அறிவூட்டி
இன்பக் கதைகூறி
எமமை வாழவைத்தீர்
மீளாத்துயில் கொண்டீர்
மீண்டுமெப்போ காண்பதம்மா
ஆண்டுபல சென்றாலும்
ஆறாது எம் துயரம்மா.

அன்னாரது இறுக்கிரியைகளில் கலந்து பல உதவிகளையும் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (26—03—1995) ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அனைவரையும் வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,

பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

35, அத்தியடி புதிய வீதி,

யாழ்ப்பாணம்.

(35887)





(சி-843)


## கருணையும், அருளும்....

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நல்கினர்.

### மூன்றாவது கும்பாபிஷேகம்

இந்நிலையில் காலப்போக்கில் அம்பாளின் ஆலயம் இயற்கையாகச் சிதைவுக்குள்ளாக்கப்பட்டதை சபையினரும், அம்பாளின் அடியார்களும் உணர்ந்தனர். ஏறக்குறைய அறுபது ஆண்டுகளுக்குமேல், திரு. சிற்றம்பலம் ஆசைப்பிள்ளை அவர்களால் செய்யப்பட்ட கும்பாபிஷேகத்துக்குப்பின்னர் கும்பாபிஷேகம் நடைபெறவில்லை என்பதை உணர்ந்தனர். கற்பகக்கிரகத்தின் மேலுள்ள விமானம் (தூபி), மற்றும் விக்கிரகங்கள்யாவும் மிகமோசமாகக் காலத்தால் சிதைவுற்றுக் காட்சியளித்தன. இதைக்கண்டு சபையினரும் பக்தர்களும் அம்பாளையும் ஏனைய மூர்த்திகளையும் பாலஸ்தாபனம் செய்துவிட்டு அடுத்த கும்பாபிஷேகத்தைக் கண்டுகளிக்கப் பேரவாக் கொண்டனர். துரிதமாகச் செயற்பட்டனர்.

1990 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் வீரபத்திரருக்கும் பத்திரகாளிக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் ஓரிடத்தில் பாலஸ்தாபனம் செய்து கோயிலைப் புனருத்தாரணம் செய்ய முற்பட்டனர். தமது மூதாதையரைப் போல் தாமும் இக் கோயிலை ஆகம விதிப்படி அருளும், அழகும் மிளிர வடிவமைக்கப் பேரவாக் கொண்டு பக்தர்களின் பூரண ஒத்துழைப்புடன் மிகவேகமாகச் செயற்பட்டனர்.

இந்த வேளையில் தான் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானது எதிர்பாராத விதமாக நாட்டு நிலைமை மிக மிக மோசமடைந்தது. தொடர்ந்தும் கட்டடத்துக்குத் தேவையான சிமெந்து போன்ற மூலப் பொருள்கள் பெற முடியாத அவல நிலை தோன்றியது. இதனால் சபையினரும் அம்பாளின் அடியவர்களும் தாங்கொணாத் துயரடைந்தனர்.

இருப்பினும் சபையினர் தளர்வடையவில்லை. அங்கும் இங்கும் ஒடித்திரிந்து சிறுகச் சிறுக மூலப் பொருள்களைத் தேடிப்பெற்று வேலைகளைச் செய்து வந்தனர். இந்நாளில் இந்த ஐந்தாவது வருடத்தில் அம்பாளின் குடமுழுக்குக் காணஅடியவர்கள் துடியாய்த் துடித்தனர். செய்வதறியாது ஏங்கி நின்ற வேளையில் எம் பெருமாட்டியின் திருவருட் பேறினால் அடியார்களும், பக்தர்களும் இன்னியும் அள்ளியும், தந்த நிதியினால், அம்பாளின் ஆலயம் இன்று புதுப் பொலிவுடன் திகழுகின்றது.

கட்டடப் பொருள்கள் யானை விலை, குதிரை விலை விற்கும் இந் நாளிலே பல நூறாயிரம் ரூபாக்களை அம்பாள் தம் அடியார்கள் வாயிலாக எம்மிடம் சேர்ப்பித்தாள். என்னே அம்பாளின் திருவிளையாடல்? கட்டடப் பொருள்களும் அவ்வப்போது முட்டின்றிக் கிடைத்தன. உண்மையும், விசுவாசமும், பத்தியுமுடைய அடியவர்களின் விடா முயற்சியினால் அம்பாள் ஆலயம் இன்று புனராவர்த்தன பிரதிஷ்டா மகா குடமுழுக்காட்டுப் பெருவிழா காணப் பெற்றுள்ளது. (தை 27; திதி- மிருகசீரிடம்; 10-02-95)

### அம்பாள் மகிமை

சக்தி இல்லேல் சிவம் இல்லை. சிவம் இன்றேல் சக்தி இல்லை என்பது ஆன்றோர் வாக்கு. இறைவன் வல்லமையே சக்தி. "எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்" என்பதற்கிணங்க எங்கள் சக்தி, வீரபத்திர சுவாமியின் சக்தி பத்திரகாளியாக பரிவார மூர்த்திகளோடு எழுந்தருளி அருள் பாலிக்கிறாள்.

அம்பாளின் அருட்திறனும், மகிமையும் அளப்பரியது. அவள் அடியாருக்கு அருள் சுரக்கும் திறன் எடுத்தியம்பப்பாலதன்று. எத்தனையோ அடியவர்களின் வாழ்க்கையில் அம்பாள் காட்டிய அருளையும் கருணையையும் விரிக்கிற் பெருகும். அம்பாளின் அருட்திறனை அடியார்கள் உள்ளமுருகி மெய்பொடிபட கண்ணீர் அருவியாய்ப் பாய தலை தடுமாறி மெய்நடுங்கி, விதிர்விதிர்க்கச் சொன்ன கதைகளை நாம் இங்கே கூறிற் பெருகும்.

### பொங்கலும் பூசையும்

இத்தலத்தின் முன்றிலில் நிற்கும் அரச மரங்கள், வாகை மரங்களின் செழுமையும், குளிர்மையும் மனதிற்கு இதம் தரும். இச் சூழலில் நிற்பதே ஒரு இன்பம். இத் தலத்தில் பண்டு தொட்டு பங்குனி மாதத்தில் வரும் முதற் செவ்வாய்க்கிழமையில் வருடாந்தப் பொங்கல் விழாவுக்குரிய விளக்கேற்றும் வைபவம் நடைபெறும். இது பொங்கல் இரண்டையும் அசம்பாவிதம் ஏதும் இல்லாமல் சிறப்பாகப் பக்தி சிரத்தையுடன் நடத்தி முடிப்பதற்கு அம்பாளிடமிருந்து விடைபெற்றுக் கொள்வதாகும். இந்நிகழ்ச்சி மிக்க பயபக்தியுடன் நடக்கும். இந்நிகழ்வின் போது மூதாதையரினால் நமக்கு அளிக்கப்பட்ட பக்திப் பாடல் பாடி அம்பாளிடமிருந்து விடை பெறப்படும். அதன் பின்னர் அடுத்த செவ்வாய் முதற்பொங்கல் (பெரிய வேள்வி) நடைபெறும். அதற்கு அடுத்த செவ்வாய் இரண்டாவது பொங்கல் (எட்டாம் வேள்வி) நடைபெறும்.

அடியவர்களின் பொங்கலில் பல்வேறு விதமான பொங்கற் சாதங்கள் இடம்பெறும். பக்தர்கள் பொங்கிப் படைத்த பல்வேறு வகையான பிரசாதத்தின் ஒரு பகுதியை அம்பாளின் ஆலய முன்றிலில் சேர்ப்பர்.

பின் அச்சாதத்தை நோயாளிகளுக்கும், ஏழைகளுக்கும். யாசகர்களுக்கும் பகிர்ந்து கொடுப்பர் இதை உட்கொண்டமக்கள் பசிப்பிணியும் உடற்பிணியும் நீங்கி மனத்திடமும் உடல் வலிமையும் பெற்றவராவர்.

பொங்கற் காலங்களில் அம்பாளின் இப்புனித பிரசாதம் சிறிதுவாங்கி உண்டு தம்பிணி தீர்ப்பதற்கு அம்பாளின் அடியார்கள் பலமைல் தூரத்தில் இருந்தும் இத் தலத்துக்கு வருவர்.

ஆலயச் சூழலில் பலவித பொங்கல்களைப் பொங்கும் மக்கட் கூட்டத்தையும் பல்லக்காடியையும் அங்காடியை மொய்த்து நிற்கும் மக்களின் கூட்டத்தையும் காணலாம் இன்னிசை வாத்தியங்களும் பக்திப் பாடல்களும் வேத மந்திர ஒலிகளும் மனதைக் கவரும். இந்த அற்புதக்காட்சியைக்காணவும், மறுபடியும் அம்பாள் கற்கோவிலில் எழுந்தருளி அருள் பாலிக்கிறாள் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## கலை வளர்க்க முன் மாதிரி

நாம் தமிழர். நமது இனம் தமிழினம்.

தமிழைப் பேசுவதால் மட்டும் நாம் தமிழராகிவிடவில்லை; நாம் பேசும் மொழி தமிழ் என்பது மட்டும் நமது இனத்துக்குரிய தனி அடையாளம் அல்ல.

அதற்கும் அப்பால் — நமது மொழி தமிழ் என்பதற்கும் அப்பால் — நமக்கு என ஒரு பண்பாடு, கலாசாரம், வாழ்க்கை முறை, பழக்கவழக்கம், சரித்திரம் என்பன இருக்கின்றன.

இன்று நடக்கின்ற விடுதலைப் போர் மண்ணை மட்டும் மீட்பதற்கல்ல; தமிழை மட்டும் மீட்கின்ற போரல்ல; தமிழோடு தமிழினத்தையும் — தமிழினத்தின் கலை, பண்பாடு, பழக்கவழக்கங்கள் இனப் பாரம்பரியம் போன்றவற்றையும் பாதுகாத்து நிலைபெறச் செய்கின்ற போராட்டமுமாகும்.

எமது கலை, பண்பாடு பல்வேறு கிளைகளை, தோற்ற வெளிப்பாடுகளைக் கொண்டது. அந்த வகையில் இசையும் எமது பண்பாட்டின் ஒரு துறை சார்ந்த கிளையாகும்.

நமது இனத்தின் இசைக்கலை பழமையான — பாரம்பரிய நெறிமுறைகளைக் கொண்ட — ஒரு கலைத்துறையாகும்.

அந்த இசையின் பாரம்பரியத்தைப் பேணுவது நமது இனத்தின் பாரம்பரியத்தைப் பேணுவதாகும்.

இன விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்து நிற்கும் எமது இளம் சமுதாயம் இனத்தை விடுவிக்கப் போராடும் அதே சமயம், இனத்தின் பாரம்பரிய விழுமியங்களான கலை, பண்பாடு போன்றவற்றைப் பேணுவதிலும் அக்கறை காட்டிவருகிறது.

இத்தகைய பணியை கலை பண்பாட்டுடன் தொடர்புடைய அமைப்புகளும் செய்து வருகின்றன.

ஆனால் இந்தப் பணியை முன்னெடுப்பதில் உள்ளூர் நிர்வாக அமைப்புக்களும் முன் வந்திருப்பது ஆரோக்கியமான ஒரு சூழ்நிலையாகும்.

கடந்த சில ஆண்டுகளாக யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களம் பெரும் பணச் செலவில் 'தமிழின்பக் கண்காட்சியை'' நடத்தி வந்தது.

தற்போது வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவு அலுவலகம் ஐந்து நாள் இசைவிழா ஒன்றை சிறப்பாக நடத்தி முடித்திருக்கின்றது.

இத்தகைய முயற்சிகள் மெச்சத்தக்கவை.

சிங்கள சிறிலங்கா அரசின் உயரதிகாரிகள் வழங்கும் ஏவல் உத்தரவுகளை சிரமேற்கொண்டு பணியாற்றுவது என்பதற்கு அப்பால், தாம் சார்ந்த சமூகத்துக்குரியதை செய்வதும் தமது உயரிய கடமை என்பதை உள்ளூராட்சி அமைப்புக்கள் மற்றும் நிர்வாக அமைப்புகள் உணர்ந்திருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும். ஒரு முன் மாதிரியும் ஆகும்.

கடந்த வாரம் வலிமேற்கு பிரதேச கலாசாரப் பேரவை நடத்திய ஐந்து நாள் இசை விழாவில் பெரும் இசை விற்பன்னர்கள் மட்டுமல்லாமல், அப்பிரதேச செயலர் பிரிவில் இலைமறைகாயாக இருந்த இளம் இசைக்கலைஞர்களும் மேடையேற வாய்ப்பளிக்கப்பட்டது. இதன் மூலம் இசைத்துறை வளர, இளங்கலைஞர்கள் முன்னுக்கு வர சந்தர்ப்பம் கிடைத்தது.

கலை, பண்பாட்டுக் கழகம் மற்றும் இசை மன்றங்கள் மட்டுமல்லாமல் வலிமேற்கு செயலர் பிரிவுபோன்ற அரச திணைக்ளங்களும் இசை விழாக்களை, தமிழ் இலக்கிய விழாக்களை நடத்துவதன் மூலம் தமிழை, தமிழரின் தனித்துவத்தை, பாரம்பரியத்தை, பண்பாட்டை பேணி வளர்க்க முடியும்.

ஏனைய அரச நிர்வாக இயந்திர நிலையங்களுக்கும் அவற்றின் அதிகாரிகள், ஊழியர்கள் போன்றோருக்கும் இந்த முன்மாதிரி சமர்ப்பணம்.

எமது மொழியையும், கலைகளையும் வளர்க்கும் பொறுப்பு எங்களுடையது என்ற உணர்வு ஒவ்வொரு தமிழனுக்கும் பிறக்கட்டும்.

# பேரம் பேசுவதற்கான பலம் தமிழர் தரப்புக்கு உண்டு; அரசு அரசியல் கண்ணாமூச்சி விளையாட முடியாது!

சமாதானத்தை உடனடியாகக் கொண்டு வந்துவிட முடியாது. நாட்டின் தலைவர் நியாய சிந்தை உடையவராகவும், அர்த்தம் உள்ளவராகவும் இருந்தாற் கூட உடனுக்குடன் சமாதானத்தைக் கொண்டு வருவது இயலாத காரியம். பல தசாப்தங்களாக நிலவி வரும், கசப்புணர்வை உண்டாக்கிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுக்களை ஒரே நாளில் முடித்து விடலாம் என்று எதிர்பார்க்கக் கூடாது —

எனவே சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட வேண்டுமாயின், இரண்டு தரப்புகளிலும் ஆக்கபூர்வமானதும் உறுதியானதுமான நடவடிக்கைகள், செயற்பாடுகள் தேவை —

அரசாங்கத்தைப் பொறுத்தளவில், பேச்சுவார்த்தையின் எந்தக் கட்டத்திலும், தனது நோக்கம் அல்லது விசுவாசம் குறித்து விடுதலைப் புலிகள் சந்தேகம் கொள்ள இடமளிக்கக் கூடாது. தப்பபிப்பிராயங்கள், சந்தேகங்கள், அச்சங்கள் குறித்து உடனுக்குடன் விவாதித்து தெளிவுபெறச் செய்ய வேண்டும். அதனைத் தாமதிக்கக் கூடாது —

இவ்வாறு அரசாங்கத்துக்குப் புத்திமதி கூறி ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளது. ''டெய்லி நியூஸ்''. இந்தப் பத்திரிகை அரசாங்க சார்புடையது. அதன் நிர்வாகத்தின் கீழேயே இயங்குவதுமாகும்.

### சந்தேகங்களை தீர்க்க இடித்துரைப்பு

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை காண்பதற்கு, அரசியல் பிரச்சினையைப் பேசுவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற அரசாங்க நிலைப்பாட்டை — அணுகுமுறையை — ஆதரித்தே அப்பத்திரிகை எழுதுகிறது. அரசியல் தீர்வு ஒன்றைக் காணமுடியுமாயின் அன்றாடப் பிரச்சினைகள் தாமாகவே மறைந்து போகும் என்ற வாதத்தையும் அது முன் வைக்கிறது.

எனினும், சமாதானத்தைக் காண்பதில் அரசாங்கத்தின் விசுவாசத்தில், நோக்கத்தில் விடுதலைப் புலிகள் சந்தேகம் கொள்கின்றனர் என்பதனை அது புரிந்து கொண்டுள்ளது. அதனாலேயே அத்தகைய சந்தேகங்களை தாமதம் காட்டாது உடனுக்குடன் தெளிவுபடுத்த வேண்டும் என்று அரசுக்கு இடித்துரைத்திருக்கிறது.

ஆயினும் அரசு அதனைப் பெரிதாகக் காதில் போட்டுக் கொண்டதாக இல்லை. தலைவர் பிரபாகரன் பல சந்தேகங்களை எழுப்பி இம்மாதம் பதினேழாம் திகதி அனுப்பிய கடிதத்துக்கு உத்தியோக பூர்வமானபதில் நேற்றுமாலை வரை கிடைக்கவில்லை. கடிதம் எழுதப்பட்டு ஒரு வாரத்துக்கும் மேலாகி விட்டதால், இது விடயத்தில் அரசு பெரும் தாமதம் காட்டியிருக்கிறது என்பதே உண்மையாகும்.

## அன்றாடப் பிரச்சினைகள் குறித்து தணித்து வாசிக்கும் தந்திரம்

### ஊக்கம் அளிக்கவில்லை

தலைவர் பிரபாகரனின் 17 ஆம் திகதிய கடிதம் கிடைத்த ஓரிரு தினங்களில், சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்து போக அரசாங்கம் அனுமதியாது; பேச்சுக்களைத் தொடர்வதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும்: என்று தெரிவித்தவர் அமைச்சர் பீரிஸ்.

ஆனால் அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் அளித்த தகவல்கள், தெரிவித்த கருத்துக்கள், பேச்சுவார்த்தைகள் தொடர்வதற்கு எந்த வகையிலும் ஊக்கமளிப்பதாக இல்லை.

தலைவர் பிரபாகரனின் கடிதத்தில் எழுப்பப்பட்ட சந்தேகங்கள் தீர்க்கப்படவில்லை. அதில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதில்களும் தரப்படவில்லை.

மிகவும் எளிதாகத் தீர்த்து வைக்கக் கூடிய, எமது மக்களின் அன்றாட — அவசியப் — பிரச்சினைகளில் உங்களது அரசாங்கம் கடுமையான போக்கைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமானால் — மிகவும் கடினமான தேசிய இனப்பிரச்சினையை உங்களால் தீர்த்து வைக்க முடியுமா என்பதில் எமக்குச் சந்தேகம் எழுவதில் நியாயம் உண்டு அல்லவா? — என்ற சந்தேகம் தலைவரின் கடிதத்தில் எழுப்பப்பட்டிருந்தது. அந்தச் சந்தேகம் இன்னும் தீர்க்கப்படவில்லை.

### கீறல் விழுந்த இசைத்தட்டு

அமைச்சரவையில் அது குறித்து ஆராயப்பட்டிருப்பின் அமைச்சர் பீரிஸ் அது குறித்து செய்தியாளர்களுக்குத் தெரியப்படுத்தி இருப்பார். ஆகக் குறைந்தது, தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை சம்பந்தப்பட்ட மூன்று கோரிக்கைகள் குறித்தாவது அமைச்சரவை ஆராய்ந்ததாக இல்லை!

அதனாலேயே, தலைவர் பிரபாகரனின் 17ஆம் திகதிய கடிதத்துக்கு முன்னர் தெரிவித்த அதே விடயங்களையே, கீறல் விழுந்த இசைத்தட்டுப் போல அமைச்சர் பீரிஸ் மீண்டும் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் ஒப்புவித்திருக்கிறார்!

இனப் பிரச்சினைக்கு முடிவு கட்டுவதற்கு, அரசாங்கம் அரசியல் தீர்வு யோசனையை வகுத்திருக்கிறது. பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு திகதியை நிர்ணயிக்குமாறு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுதலைப் புலிகளுக்கு ஏற்கனவே அறிவித்துள்ளார் — என்ற பழைய பல்லவியையே பேராசிரியர் பீரிஸ் பாடியிருக்கிறார்.

### பந்து அரசின் கையிலேயே

அரசியல் தீர்வு யோசனைகளை விடுதலைப் புலிகள் ஆராய்வதற்கு போதிய அவகாசம் தரக்கூடிய வகையில் அரசாங்கம் அவற்றை அனுப்பி வைக்கத் தயாராக இருக்கிறது. இது சம்பந்தமான பேச்சு வார்த்தைகளை அடுத்த மாதம் இரண்டாம் திகதிக்கும் பத்தாம் திகதிக்கும் இடையில் நடத்த முடியும் என்று அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு அறிவித்துள்ளது —

அரசியல் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெறும், கூடிய விரைவில் சமரசம் ஏற்

அரசியல்

படும் என்று அரசாங்கம் நம்புகிறது — என்று சந்திரிகா தலைவர் பிரபாகரனுக்கு மார்ச் ஒன்பதாம் திகதி எழுதிய கடிதத்தில் தெரிவித்த அதே விடயங்களையே அமைச்சர் மீள ஒப்புவித்திருக்கிறார்.

பேச்சுவார்த்தையில் பந்து விடுதலைப் புலிகளின் பக்கத்திலேயே உள்ளது என்று சிங்கள மக்களுக்கும், வெளி உலகத்துக்கும் காட்டும் ஏமாற்று வேலையாகும் இது! உண்மையில் பந்து இன்னமும் அரசின் கையிலேயே உள்ளது.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினை சம்பந்தப்பட்ட மூன்று விடயங்களுக்கும் அரசின் பதில் நேற்று வரை தெரிவிக்கப்படவில்லை.

### துட்டுக்கு இரண்டு கொட்டப் பாக்கா?

அந்த விடயத்தைத் தொடாமல் தந்திரமாகத் திசை திருப்ப முயல்கிறது அரசு. வட்டுக்கோட்டைக்குப் போகும் வழி எது என்று கேட்டதற்கு, ''துட்டுக்கு இரண்டு கொட்டப் பாக்கு'' என்று பதிலளிக்கும் பாணியில் அரசின் போக்கு அமைந்துள்ளது.

இந்தத் திசை திருப்பும் போக்கையும், ஏமாற்றுத்தனத்தையும் தமிழ் மக்கள் புரிந்து கொள்வார்கள். ஒருவர் அனுப்பும் கடிதத்துக்குப் பதில் அனுப்பும் மரியாதையேனும் அரசுக்கு இருக்க வேண்டும் என்றே தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

வைபவம் ஒன்றில், நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளுமாறு ஒருவருக்கு தெரிந்தவரிடம் இருந்து அழைப்பு வருகிறது என்று வைத்துக் கொள்வோம். அந்த வைபவத்துக்குச் சமுகமளிப்பதற்கு சம்பந்தப்பட்டவருக்கு வசதியில்லையெனில், அவர் தமது பிரதிநிதி ஒருவரை அனுப்பி வைப்பார். அதற்கும் வசதியில்லை என்றால் தம்மால் வரமுடியவில்லை என்று ஒரு கடிதத்தையாவது அனுப்பி வைக்கலாம். அதுவே பண்பு. நட்புறவுக்கும், விசுவாசத்துக்கும் எடுத்துக்காட்டு.

ஆனால் முக்கியமான, மிகப் பிரதானமான ஒரு விடயம் சம்பந்தமாகக் கடிதம் எழுதி விட்டுக் காத்திருப்பவருக்கு, பதில் எழுதாமல் தப்புவதற்காக மூன்றாமவர் ஒருவரை அனுப்பி சமாளிக்க நினைப்பது கடிதம் எழுதியவரை மடையனாக்கும் செயல்.

இந்த வகையில் அரசாங்கடு எடுத்த ஒரு முயற்சியை விடுதலைப் புலிகள் நிராகரித்துத் தமது உறுதிப்பாட்டைத் தெரிவித்தனர்.

### தணித்து வாசிக்க முயற்சி

தலைவர் பிரபாகரனின் கடிதத்துக்கு பதில் எழுதுவதைத் துரிதப்படுத்தாமல், அங்கிலிக்கன் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ, கலாநிதி ஜெயதேவ உயங்கொட, ஜனாதிபதியின் செயலாளர் குசும்சிறி பாலபட்டபெண்டி, ''மோர்ஜ்'' அமைப்பின் தலைவர் சாள்ஸ் அபயசேகரா ஆகியோரைத் தூது அனுப்பி காலக்கெடு விடயத்தைத் தணித்து வாசிக்க அரசு முயன்றது.

ஆனால் விடுதலைப் புலிகள் இணங்கவில்லை. அரசாங்கம் தனது அணுகுமுறையை மாற்றப்போகிறதா இல்லையா என்பது குறித்துப் பதில் கிடைத்த பின்னரே பேசமுடியும் என்று தெரிவித்து விட்டார்கள்.

நால்வர் குழு இங்கு வருவதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்திருப்பின், தலைவரின் கடிதத்திற்குப் பதில் அனுப்பாமலே, 28ஆம் திகதிக் காலக்கெடு குறித்துப் பேசுவதற்குத் தூதுவர்களை அனுப்பிவிட்டோம் என்று அரசு பிரசாரம் செய்திருக்கும்!

பிரசார உத்திமூலம் தான் எண்ணுவதைச் செய்வதற்கு அரசு நினைக்கிறது. ஆனால் அந்தத் தந்திரம் விடுதலைப் புலிகளிடம் பலிக்காது என்று மீண்டும் ஒருமுறை எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது!

## ஒட்டிய வயிற்றுடன் ஒருவன் சமாதானம் பேசுவது எப்படி?

### இருவர் வந்தனர்

எனினும் அரசாங்கம் தனது தந்திர முயற்சியைக் கைவிட்டதாக இல்லை. உத்தியோகப்பற்றற்ற முறையில் தான் பிடிபடாமல் இருந்து கொண்டு, சில தகவல்களைத் தெரிவிப்பதற்கு, கொழும்புப் பத்திரிகையாளர்கள் இருவரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியது. அந்த இருவரில் ஒருவர் சிங்களவர்; மற்றவர் தமிழர்.

அவர்கள் கிளாலி ஊடாக கடந்த வியாழக்கிழமை இரவு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். இங்கே வந்து சேர்ந்ததும் தமது பணியைச் செய்ய முயன்றார்கள்.

இந்த நாடகத்தில் நடிப்பதற்குத் தாம் தயாராக இல்லை என்று தெரிவித்து, விடுதலைப் புலிகள் அந்தப் பத்திரிகையாளர்கள்இருவரையும் மதிப்பாகத் திருப்பி அனுப்பினர்!

தலைவரின் கடிதத்துக்கு உத்தியோக பூர்வமான பதிலையே விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கிறார்கள் என்று அவர்கள் உணர்ந்து கொண்டு கொழும்பு திரும்பினர். விடுதலைப் புலிகளின் இந்த உறுதியான நிலைப்பாட்டை நிச்சயம் கொழும்பில் அரச உயர்பீடத்துக்கு அவர்கள் தெரிவித்திருப்பர்.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் சம்பந்தமாக அரசு மேற்கொள்ளப் போகும் முடிவு என்ன? இதனையே தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

### பேரம் பேசக்கூடிய நிலையில்

தமிழர்கள் இப்போது பேரம் பேசக்கூடிய நிலையில் உள்ளார்கள். இராணுவ பலத்தால் மட்டும் அவர்கள் மேலோங்கி நிற்கவில்லை. வடக்கில் தமக்கென ஒரு தன்னாட்சிக் கட்டமைப்பை ஓரளவுக்கு உருவாக்கி இருக்கிறார்கள்.

அரசாங்கம் இதனை உணராமல் சமாதானப் பேச்சு என்ற பெயரில் திருகுதாளம் புரியவோ, தில்லுமுல்லுச் செய்யவோ முயன்றால் தமிழர்கள் தனியான ஒரு நாட்டில் வாழ்வதையே பெரிதும் விரும்புவார்கள்.

தனிநாட்டுக்குப் பதிலாக, மாற்றீடான வேறு ஓர் அரசியல் முறையை பரிசிலிக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதற்காக, தமிழர்கள் முந்திய காலங்களைப் போல ஏமாறுவதற்குத்தயாரில்லை. அவர்கள் தக்கபலத்துடனேயே பேச்சுவார்த்தை மேசைக்குப் போயிருக்கிறார்கள். சமாதானத்தைக்காண விரும்புவதால் தமிழர்கள் உரிமைப் போராட்டத்தில் சோர்ந்து விட்டார்கள் என்று அரசு தப்புக்கணக்குப் போட்டால், நட்டம் சிங்களவர்களுக்குத்தான்.

தமிழர் பிரச்சினை இப்போது சர்வதேச மயப்படுத்தப்பட்ட ஒரு விவகாரம். இது விடயத்தில் என்ன நடக்கப் போகிறது என்று உலகம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது.

எனவே, அரசு சமாதானப் பேச்சு என்று கூறிக்கொண்டு அரசியல் கண்ணாமூச்சி ஆடு

**-உதயகாந்தன்-**

வதற்குத் தமிழர்கள் இடமளிக்க முடியாது; இடமளிக்க மாட்டார்கள்.

### பசியோடு பேசுவது எப்படி?

பசியோடு உள்ளவன் எப்படிச் சமாதானம் பற்றிப் பேச முடியும்? ஒட்டிய வயிற்றுடன் உரத்துக் கதைக்க முடியுமா? சமாதானத்துக்கான அழைப்பு, பசியினால் களைப்புற்று செவிப்புலன் உணர்வு மங்கிப்போய் இருக்கும் ஒருவனுக்கு எப்படிக் கேட்கும்? பசியினால் கண் பசாடை அடைந்தவனால் சமாதானப் புறாவைக் காண முடியுமா? இதனைப் போய் தெற்கு மக்களுக்குச் சொல்லுங்கள்; அங்குள்ள சமாதானப் பிரியர்களுக்கும் சொல்லுங்கள். அரசாங்கத்துக்கும் சொல்லுங்கள் — என்று வணபிதா ஒருவர் கருத்தரங்கு ஒன்றில் கூறியதை ஞாபகப்படுத்தலாம்.

கொழும்பிலிருந்து வந்த சமாதானப் பிரியர்கள் கலந்து கொண்ட கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்ட அர்த்த புஷ்டியுள்ள இந்தக் கருத்து அரசாங்கத்திடம் இன்னும் சென்றடையவில்லையா? சென்றடைந்தும் அரசு அக்கறை — கரிசனை — காட்டவில்லையா?

தலைவரின் கடிதத்துக்கு நேற்றுவரை பதில் கிடைக்கவில்லை என்பதால் தமிழ் மக்களின் கருத்தை அரசாங்கம் இன்னும்செவிமடுக்கவில்லை என்பதே அர்த்தம்!

தமிழ் மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்க முடியாத அரசினால், அவர்களின் பிரச்சினைகளை எப்படித் தீர்த்து வைக்க முடியும்? ★

# ஈழ அகதிகளை மீள அனுப்பிவிட வேண்டும் என்பதே தமிழக அரசின் குறிக்கோள்

தமிழ்நாட்டிலிருந்து கடந்த நான்கு வாரங்களில் சுமார் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

> பி.பி.ஸியின் தமிழோசை கண்ணோட்டத்தின் தொகுப்பு இது.

மேலும் 54 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் 120

## 4 வாரங்களில் 10 ஆயிரம் பேர் திரும்பினர்

தமிழக முகாம்களில் இன்னமும் இருக்கிறார்கள்.

தமிழ் நாட்டிலிருந்து இரண்டு கப்பல்கள் 14 தடவைகள் இலங்கை இந்திய நாடுகளிடையே பயணித்து, இலங்கைத் தமிழ் அகதிகளை தலைமன்னார் மற்றும் திருகோணமலைத் துறைமுகங்களில் சேர்த்துள்ளது.

மேலும் இந்தியாவின் சிறப்பு முகாம்களில் உள்ள ஆயிரத்து 700 தமிழர்களை திருப்பி அனுப்புவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசு கேட்டுள்ளது. சிறப்பு முகாம்களில் உள்ள இந்த அகதிகள் தீவிரவாதிகள் என்று குறிப்பிடப்பட்டவர்கள்.

இவர்களில் 370 பேர்களை இலங்கை அரசாங்கம் ஏற்க மறுப்புத் தெரிவித்துள்ளது. இவர்கள் அனைவரும் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று நம்பப்படுபவர்கள். மற்றும் உள்ள அகதிகள் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தைச் சார்ந்தவர்கள்.

தமது நாட்டில் அமைதி திரும்ப வேண்டுமெனில், தீவிரவாதிகள் உட்பட அனைத்து இலங்கைத் தமிழ் அகதிகளும் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மத்திய அரசை கேட்டிருக்கின்றார்.

இதுவரையில் தாங்களாகவே தாயகம் திரும்ப முன் வந்த அகதிகளே யூ.என்.எச்.சி.ஆர் உதவியுடன் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 20ஆயிரம் வரையிலான அகதிகள் தாங்களாகவே தாயகம் திரும்ப முன் வந்துள்ளனர்.

கடந்த 2ஆண்டுகளில் தமிழகத்திலிருந்து தாமாகவே இலங்கை திரும்பிய அகதிகள் எண்ணிக்கை சுமார் 65ஆயிரம் என்றுகூறலாம். இவ்வளவு எண்ணிக்கையில் தமிழ் அகதிகள் வேறு நாடுகளிலிருந்து திரும்பிச் செல்லவில்லை.

தமிழகத்தில் இந்த அகதிகள் வசதியற்ற சூழ்நிலையில் [illegible] எவ்வித பராமரிப்பு வசதிகளும் நல்கப்படாமையுமே இதற்குக்காரணம் என்று கூறலாம்.

இலங்கை அகதிக்குழந்தைகளின் பள்ளிப்படிப்புக்கு தமிழகத்தில் எந்த விதமான தடையும் இல்லை என்ற போதிலும் கூட, அவர்களின் கல்லூரிமேற்படிப்புக்கு முட்டுக்கட்டை போடப்பட்டது.

பெரும்பாலான முகாம்களில் சுகாதார வசதிகள் இல்லை. அவசரமாக அமைக்கப்பட்ட பலமுகாம்கள் திரும்பவும் செப்பனிடப்படாமல் இன்னமும் இருந்து வருகின்றன.

இலங்கை அகதிகளின் பிரச்சினைகள், தேவைகள் தீர்த்து வைக்கப்படுவது தொடர்பாக தமிழக அரசிடம் முறையீடுகள் செய்யப்பட்டன. தமிழக அரசு இப்பிரச்சினைகளை அரசியல் பந்தாகவே கருதி மத்திய அரசிடம் உதைத்துவிடுவதும்—

பின்னர் மத்திய அரசு அதனை தமிழக அரசிடம் திருப்பி விடுவதுமாகவே இருந்துள்ளது.

பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

சென்ற ஆண்டு மேமாதம் முதல் இந்திய அரசு, இலங்கை அகதிகளின் நடமாட்டத்தை வெகுவாக கட்டுப்படுத்தியது; பாதுகாப்பு என்ற போர்வையில், அரசு சார்பற்ற நிறுவனங்கள் இம்முகாம்களுக்குச் செல்வதையும் தடுத்து நிறுத்தியது.

அகதிகளுக்கு பொதுவாக அனைத்துலக அரசியல், மனித நேயம் சர்வதேச சமூக பொருளாதார உரிமை இவை அனைத்தும் அடங்கிய மனித உரிமை நெறிகள் அனைத்தையும் தமிழக அரசு முழுமையாக மீறி நடந்துள்ளது. இதன் ஒரே குறிக்கோள் இலங்கை அகதிகளை நாடு திருப்பி அனுப்ப வேண்டும் என்பதே.

(ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை. கலைப் பீட அனுமதிக்கு தரப்படுத்தல் முறை நீக்கப்படும்?

## அரசு ஆலோசிப்பதாக பிரதி அமைச்சர் தகவல்

கொழும்பு, மார்ச் 26
பல்கலைக் கழகங்களில் கலைப்பீடத்துக்கு தரப்படுத்தல் முறையை விடுத்து தகுதி அடிப்படையில் மாணவர்களை அனுமதிக்க அரசு ஆலோசித்துள்ளது.

— கல்வி உயர்கல்வி பிரதி அமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபால முன்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்பு கிளையினர் கடந்த வியாழனன்று கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை வெள்ளவத்தை இங்ஷென் கல்லூரியில் நடத்தினர்

அந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதி அமைச்சர் விஸ்வவர்ணபால இதனைத் தெரிவித்தார்.

கலைப்பீடம் தவிர்ந்த ஏனைய பீடங்களுக்கான அனுமதியையும் தகுதி அடிப்படையில் வழங்க அரசு ஆலோசித்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

மண்எண்ணெய் விளக்கில் படிக்கும் வடபகுதி மாணவர்கள் தரப்படுத்தல் முறையால் பாதிக்கப்படுவது பற்றி தமிழ் அரசியல் தலைவர்கள் இங்கு கூறியது என் மனதை உருக்கிவிட்டது என்றும் தமது உரையில் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ-4)

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா சொக்கநாதபிள்ளை

[ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்]

வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற இராமநாதர் சின்னையா - இராசம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியருமான [இளையதம்பி மகாவித்தியாலயம்] சின்னையா சொக்கநாதபிள்ளை அவர்கள் 21 - 03 - 95 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பத்மாவதியின் [இளைப்பாறிய ஆசிரியை - வண் நாவலர் மகாவித்தியாலயம்] அன்புக் கணவரும், முகுந்தன், சபேசன், தயாபரன், மால்மருகன், சதானந்தி, சடாட்சரன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும், வித்துவான் இ. சி. சோதிநாதன், இலங்கேஸ்வரி நடராசா, குணேஸ்வரி நடராசா, இ. சி. தில்லைநாதர்மூர்த்தி, பஞ்சாட்சரேஸ்வரி, கிருஸ்ணதேவா ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-3-95) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, காலை 8.30 மணியளவில் பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சொ. முகுந்தன்
[மகன்]

29, கோபால் ஒழுங்கை,
யாழ்ப்பாணம் [35883]

## சோமசுந்தரம் சிதம்பரநாதன்

(ஓய்வுபெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர், பெருநதெருக்கள் திணைக்களம்/வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சிதம்பரநாதன் நேற்று சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

இவர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பிரக்கிராசியார் சோமசுந்தரம் பொன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும், நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் (மலாயன் பென்சனர்) சின்னம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும், இந்திராவின் ஓய்வு பெற்ற கணித ஆசிரியை இராமநாதன் கல்லூரி) அன்புக் கணவரும் ஸுகந்தனின் (கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட நாலாம் ஆண்டு மாணவன்,) பாசமிகு தந்தையும், சனகநாயகம், தையல்நாயகி இராசநாயகம், தனலக்சுமி சுகனேசன், வைத்தியநாதன், சிவகுமார், செல்வி சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சண்முகப்பிரியா, ரமேஸ்வரன், இராமச்சந்திரன், கமலா கணேசமூர்த்தி, திருமதி க. விமலா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
இந்திரா சிதம்பரநாதன்
(மனைவி)

(35897)

## பாலமணி திருநாவுக்கரசு

அளவெட்டி, பெருமாக்கடவையை பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் 30/2, கல்யாணி றோட், பாமன் கடையில் வசித்தவரும் ஆகிய பாலமணி திருநாவுக்கரசு அவர்கள் [21- 3 - 95] செவ்வாய்க்கிழமை அன்று அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு (நஷனல் வங்கி சிறாப்பர், கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம்- பூரணம் ஆகியோரின் அன்பு மகளும், சித்திரா, வைகுந்தன், ஈஸ்வரி (பவானி), மஞ்சுளா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வை. மாணிக்கவாசகர்
(சகோதரன்)

பெருமாக்கடவை,
அளவெட்டி தெற்கு, (35895)

## சேனாதிராசா இராசலிங்கம

(தாவடி)

என்றென்றும் சாயியின் திருவடியை நினைத்து வாழ்ந்த சேனாதிராசா இராசலிங்கம் (சுங்க அதிகாரி) கொழும்பில் காலமானார்.

அன்னார் கொக்குவில் பிரம்படியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தாவடியை வதிவிடமாகக் கொண்டவரும், ஆனந்தவல்லியின அன்புக் கணவரும், பராபரன் (நோர்வே) கயபலா, சாயிபரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள்), சுயாநந்தினி (உடுவில் மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அருமைத் தந்தையும், கொக்குவில் பிரம்படி காலஞ்சென்ற சேனாதிராசா அன்னரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும், தாவடியைச் சேர்ந்த காலஞ்சென்ற இராமலிங்கம் நல்லம்மா ஆகியோரின் மூத்த மருமகனும், திருவெண்காடர் (கொக்குவில் - பிரம்படி) வைகுந்தநாதன் (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரரும், தாமோதரம்பிள்ளை (மின் பொறியியலாளர், யாழ். மாநகர சபை), சரவணபவன் (சிகோ - தாவடி), ஸ்ரீகரன் பரமானந்த் மி-ஸ்), வரதராஜா (நோர்வே), பதமாசனி, கலாவதி, சிவமலர் (நோர்வே), சத்தியசீலன் (நோர்வே) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 27 - 3 - 95 திங்கட்கிழமை மாலை 2 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும், ஈமக்கிரியைகள் தாவடி மயானத்தில் மாலை 3 மணிக்கும் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
S. R. சரவணபவன்
[மைத்துனர்]

தாவடி. [35898]

## தங்கவேல் நிமலச்சோதி

சுன்னாகம் சோதி நகை தொழிற்சாலை உரிமையாளரின் மகன் தங்கவேல் நிமலசோதி காலமானார்

இவர் இ. தங்கவேல், த. இராஜேஸ்வரி ஆகியோரின் அருமை மகனும், சாந்தினி, மனோசரி ஆகியோரின் சகோதரனும், இரத்தினலிங்கம், இராசகுமாரின் மைத்துனரும், ஜஸ்மிந்தனின மாமனாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (ஞாயிறு) பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில நடைபெறும்.

தகவல்
இ. தங்கவேல்

புகையிரத வீதி,
சுன்னாகம். [35893]

## சித்திரா பௌர்ணமியன்று 1 மணிநேரம் சந்திரகிரகணம்

யாழ்ப்பாணம், மார்ச் 26
சித்திரைப் புத்தாண்டுக்கு அடுத்த நாள் வரும் சித்திரா பௌர்ணமியன்று சந்திர கிரகணம் இடம்பெற உள்ளது.

ஆலயங்களில் நடத்தப்படும் சமயக் கிரியைகள் நிகழ்ச்சிகள் யாவும் சந்திர கிரகணத்துக்கு முன்னர் இடம்பெற வேண்டும் என்று இலங்கை இந்துமத குரு பீடாதிபதி அருட்திருஜோதி சிவப்பிரம்ம ஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாசாரியார் அறிவித்துள்ளார்.

அவர் இது குறித்து வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

யுவ வருடம் சித்திரை மாதம் 2ஆம் திகதி (15-4-95) சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை சந்திர கிரகணம் இருப்பதால்—

அன்றைய தினம் ஆலயங்களில் நடைபெறும் சமயதிரு விழா நிகழ்ச்சிகள் யாவும் மாலை 6.00 மணிக்குள் நிறைவு செய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கிறோம்.

அதற்கு வசதியில்லையாயின் ஏழு மணிக்குப்பின் ஸ்நானம் செய்து புதிய நிவேதனங்களை சமைத்து சுவாமிக்கு புதிய அலங்காரம் செய்து திருவிழாவை தொடரலாம்.

கிரகண நேரத்தில் உணவு உண்ணுதல் சமய நிகழ்வுகள் கிரியைகள் செய்தல் தீமைகளை விளைவிக்கும் என்பதை தெரிவித்து எல்லா மக்களும் நலமுடன் வாழ இறைவனை பிரார்த்தித்து நல்லாசி கூறுகிறோம் — என்று உள்ளது. (அ)

## கடனுக்கான வட்டி வீதம் குறைப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 26
இலங்கை வங்கியினால் விவசாயம், கைத்தொழில், வியாபாரம் போன்றவற்றுக்காக வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டி வீதம் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை வங்கியின் யாழ் மாவட்ட முகாமையாளர் திரு. எஸ், சண்முகசுந்தரம் தெரிவித்தார்.

இதுவரை காலமும் இக்கடன்களுக்காக வருடமொன்றுக்கு அறவிட்டு வந்த 21 சதவீத வட்டி வீதம் 17.5 சத வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வட்டி வீதக் குறைப்பு ஏற்கனவே வழங்கப்பட்ட மேற்குறிப்பிட்ட கடன்களுக்கும் அளிக்கப்படுவதற்கான சுற்று நிருபம் கொழும்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-4)

## மைக் டைசன் விடுதலை

வாஷிங்டன், மார்ச் 26
கற்பழிப்புக் குற்றத்துக்காக அமெரிக்காவில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த முன்னாள் அதிபார குத்துச்சண்டை வீரர் மைக் டைசன் நேற்று விடுதலை செய்யப்பட்டார்

மூன்று வருடங்களுக்கு முன்னர் அவருக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டது [ஐ]

## மாணவருக்கான மேலதிக உணவு முத்திரை பெறலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 26
நல்லூர் பிரதேச செயலர் பிரிவில பாடசாலை செல்லும் 5 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்கள் இதுவரை மேலதிக உணவு முத்திரைகள் பெறாவிடின் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தத்தம்கிராமசேவகர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

இத்திகதிக்கு முன்னர் முத்திரைகளை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு பின்னர் மாணவர்களுக்கான மேலதிக உணவு முத்திரைகள் வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை யாழ். பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மாணவர்கள் மேலதிக உணவு முத்திரைக்கு விண்ணப்பித்து பெறாதவர்களும் இதுவரை முத்திரைக்கு விண்ணப்பிக்காதவர்களும் கிராம சேவையாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (ஒ-17)

## ஔவையார் விழா நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 26
கந்தர்மடம், ஆத்திசூடி வீதி, ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தினர் நாளையும், நாளை மறுதினமும் ஔவையார் விழாவை நடத்தவுள்ளனர்.

முதல் நாள் நிகழ்ச்சிகள் நாளை மாலை 6 மணிக்கு ஆலய முன்றிலில் திரு க. சிவராமலிங்கம் தலைமையில் ஆரம்பமாகும்.

நல்லை ஆதீனக்குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பராமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

கலாநிதி நா. சுப்பிரமணியன், தமிழருவி த. சிவகுமாரன், ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

ஔவையார் சம்பந்தமான கதாப்பிரசங்கம், பட்டிமண்டபம், வில்லிசை ஆகியனவும் இடம்பெறும். (அ)

## தடகள விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில நடைபெறும்.

யாழ் பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட அரசசேவையாளர்? மெய்வல்லுநர் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி ரி. டபிள்யூ ஜெயகுலராஜாவும் கௌரவ விருந்தினராக யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு இணைப்பாளர் திரு எழிழனும் கலந்து கொள்வர். (ஒ-14)

## விளையாட்டு நிகழ்வுகள்

சங்கானை ஜுப்பிற்றர் விளையாட்டுக்கழகம் தனது 5 ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களின்விவரம் வருமாறு:.

★ முற்பகல் 8 மணி— உடுவில் சென் பேரிஸ் எதிர் கொக்குவில் கலைமகள் அணி.

★ பிற்பகல் 3 மணி— சண்டிலிப்பாய் செட்டி வி க அணி எதிர் நல்லூர் நொதேண் அணி

★ பிற்பகல் 4 30 மணி— சங்கானை ஜுப்பிற்றர் அணி எதிர் நவாலி சுப்பர் வி. க அணி (ஐ

★ ★ ★

ஜொலிஸ்ரார் அணிக்கும் மல்லாகம் ஆர். டி. எஸ் அணிக்குப் இடையிலான கிரிக்கெட் போட்டி இன்று முற்பகல் 9 மணிமுதல் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. [ஐ-20)

★ ★ ★

சத்தியா விளையாட்டுக்கழகம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடதத்வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று கடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு;-

★ பிற்பகல் 3 மணி — நியூஸ்ரார் அணி எதிர் விநாயகர் வி. க. 'ஏ' அணி.

★ பிற்பகல் 4 மணி — யங்ஹேபல் வி... எதிர் ... ஹென் றீஸ் 'பி' அணி.
(ஐ-20)

## அனுருத்த...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வத்த —

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு நேற்றிரவு இந்தியா சென்றதைத் தொடர்ந்து —

நாடு திரும்பி நேற்று காலை பதில் பாதுகாப்பு அமைச்சராக, பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

மற்றும் நான்கு பிரதி அமைச்சர்களும் பதில் அமைச்சர்களாக நேற்றுப் பதவி ஏற்றனர் (அ)

## இனப்பிரச்சினைக்கு—

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வைச் சந்தித்தார்.

இலங்கையும் இந்தியாவும் பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் விரிவுபடுத்துவது குறித்து பிரதமர் நரசிம்மராவ்வுடனான சந்திப்பின்போது ஆராயப்பட்டது

பிரதமர் நரசிம்மராவ்வுடனான சந்திப்பின் போது இலங்கையில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா எடுத்துரைத்தார்.

மீனவர் பிரச்சினை, தமிழ் அகதிகளைக் குடியமர்த்துதல போன்ற பிரச்சினை குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா இந்திய தலைவர்களுடன் பேச உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா ... இக்க உள்ளார். [இ-ஜ-4-5]

## பீடாரோஹண பாராட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 26
இலங்கை இந்துமத குரு பீடாதிபதி, வேதாகம பூஷணம் சிவஸ்ரீ ஸ்கந்தசாம்பசிவ சிவாச்சாரியாரின் பீடாரோஹண பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு — ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான — சண்முக விலாஸ் மண்டபத்தில் நடைபெறும்.

சென்னை காளியம்மன் கோயில் சிவஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாச்சாரியார், நயினை சிவஸ்ரீ சாமி பரமேஸ்வரக் குருக்கள், கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள், கப்பிதாவத்தை சித்தி விநாயகர் ஆலய பிரம்ம ஸ்ரீ ப. சண்முகரெத்தின சர்மா ஆகியோர் தலைமை வகித்து இவ்விழாவினை நடத்தி வைப்பார்கள்.

சிறப்புரைகள், மதிப்புரைகள், மகிழ்வுரைகள், கவியுரை என்பனவும் — தொடர்ந்து பீடாரோஹண சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெறும். (ஒ-14)

## மன்னிப்புக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விஸ்தரித்தல் பற்றியும்— மற்றும் எரிபொருள் வழங்குவது தொடர்பான பிரச்சினை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கடிதம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டது குறித்த தகவல் எதனையும் ... ங்கத் தரப்பினர் நேற்று வரை உறுதி செய்யவில்லை. [ஐ-6]

## ஜெயந்தி தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 26
கீரிமலை சுவாமி அம்மாவின் 72 ஆவது ஜெயந்தி தினம் இன்று ஞாயிறு முற்பகல் 10 30 மணிக்கு சங்கானை இலுப்பைத்தாள் முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

## உதைபந்தாட்ட சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ். மாவட்ட உதைபந்தாட்ட சபையின் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழம முற்பகல் 10-00 மணிக்கு கோண்டாவில் அரசியல் துறை யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு, வடமராட்சி, தென்மராட்சி, தீவக உதைபந்தாட்டச் சங்கங்களிலிருந்து தலா மூன்று பிரதிநிதிகளை கலந்து கொள்ளுமாறுயாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது. [ஒ]


# பட்டப்படிப்புக்கள்

ஆரம்பம்: 05 - 04 - 95

G. A. Q. – 1995 (யாழ்ப்பாணம்)
G. A. Q. – 1996 (யாழ்.பேராதனை)
First In Com – 1995/96 (யாழ்ப்பாணம்)

பதிவாளர்
பட்டப்படிப்பு பிரிவு
கலை வர்த்தகக் கல்லூரி
C. C. A. யாழ்ப்பாணம்.

எமது விரிவுரையாளர் குழு

பொருளியல் — திரு. உதயன்
கணக்கியல் — திரு. ஸ்ரீ
தமிழ் — திரு கணேஸ்
இ. நாகரிகம் — திரு ஜோதீஸ்வரன்

ஏனைய எல்லாபாடங்களுக்கான விரிவுரைகளும்நடைபெறும்.

குறிப்பு: முழுபாடத்திட்டமும், பூர்த்திசெய்யப்பட்டு மீட்டல் வகுப்பும் நடைபெறும்.

[சி/630]


# மரண அறிவித்தல்கள்

## செல்லையா சுப்பிரமணியம்

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த செல்லையா சுப்பிரமணியம் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா - இராசம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், அனுசூயா (லண்டன்), காலஞ்சென்ற அசோகன் மற்றும் பார்த்திபன் (லண்டன்), ஆதித்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார் (லண்டன்), சித்திரா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், ரூபிகாவின் பேரனும், கணேசலிங்கம், சோமசுந்தரம், தெட்சணாமூர்த்தி, சத்தியமூர்த்தி ஆகியோரின் சகோதரரும், தம்பிராஜாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (26-3-95) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. தகனக்கிரியைக்காக பூதவுடல் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. புவனேஸ்வரி
(மனைவி)

'தமிழகம்',
வேம்பன் வீதி,
உரும்பிராய் தெற்கு. (35900)

## திருமதி தங்கமமா நல்லதம்பி

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தங்கம்மா நல்லதம்பி நேற்று (25 03-95] கனடாவில் காலமானார்.

இவர் இராசேந்திரம் [நீர்கொழும்பு], மகேந்திரன் [சட்டத்தரணி - கனடா] ஆகியோரின் அன்புத் தாயாரும், தவமணிதேவி, சத்தியவதி [கனடா] ஆகியோரின் மாமியாரும், திருமதி அரியபுத்திரன் நேசம்மா, செல்லத்துரை [நீர்கொழும்பு], காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கனகசபை, நடராசா ஆகியோரின் சகோதரியும், நடராசா, ஐயம்பிள்ளை, பாலசிங்கம், பொன்னம்மா, காலஞ்சென்ற சின்னத்துரை ஆகியோரின் மைத்துனியும், புற்கலை [புங்/மகா வித்தியாலயம்], சித்திரா [கனடா), நிமலன் (சுவிஸ்), பகீரதன் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27-3-95) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

துக்க நிகழ்வு அன்னாரின் 24, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
பா. புற்கலை

24, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (35901)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26 - 03 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org